Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
34°c 27°c

பக்கம் 20 | சுடர்: 28 | கதிர்: 155 | வள்ளுவர் ஆண்டு: 2044 | சித்திரை 17, செவ்வாய் 30.04.2013

## விபத்தில் முதியவர் சாவு

யாழ்ப்பாணம்,ஏப்ரல்.30
யாழ்.நகரில் தனியார் பஸ் மோதியதில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அந்த பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் பஸ்ஸும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்.பண்ணைச் சந்தியில் நேற்று திங்கட்கிழமை காலை 6.45 மணியளவில் இடம்பெற்றது.

வேலணையிலிருந்து பயணிகளுடன் யாழ்.நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸே முதியவரை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பண்ணைச் சந்தியில் நடந்த இந்த விபத்தில் முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் யாழ்.புங்குடுதீவைச் சேர்ந்த ஆறுமுகம் தனபாலன் (வயது -63) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உடற் கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

**உள்ளூர்**



பக். 07
கிளிநொச்சி நகரில் மீண்டும் அமைகிறது தண்ணீர்த் தாங்கி

**உலகம்**



பக். 04
இணைந்து செயற்பட தயார் - இந்தியாவிடம் கூறுகிறது சீனா

**விளையாட்டு**



பக். 16
வோர்னர் அதிரடி: வீழ்ந்தது புனே




வலி. வடக்கு மக்களின் போராட்டம் 23 வருடங்களுக்கு மேலாகத் தொடர்கிறது. நீண்ட நாள் காத்திருப்புக்குப் பின்னர் தமது காணிகளை இழக்க அவர்கள் தயாரில்லை.

# 5,000 வழக்குகள்

## வலி. வடக்கு காணி சுவீகரிப்பை எதிர்த்து தாக்கல் செய்ய முடிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30
பலாலி விமான நிலையம், காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றைச் சுற்றியுள்ள தமிழர்களின் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை இராணுவத்துக்காகச் சுவீகரிக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்த்து குறைந்தது 5,000 வழக்குகளைத் தாக்கல் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையில் நேற்று நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போராட்டத்தில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்த அறிவிப்பை விடுத்தார். வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு ஏதுவாக, காணி ஆவணங்களைத் தருமாறு உரிமையாளர்களிடம் அவர் கோரிக்கை முன்வைத்தார்.

தற்போதைய நிலையில் இலங்கையில் உள்ள நீதிமன்றங்கள் அனைத்தையும் நிரம்பும் வகையிலான போராட்டமாக இந்த 5,000 வழக்குகளையும் தாம் தாக்கல் செய்யப் போவதாகவும் அவர் கூறினார்.

மே மாதம் 2ஆம் திகதி வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

''5,000 வழக்குகள் தாக்கல் என்பது உலகையே உலுக்கும் செய்தியாக வரும். அதுவரையாவது நாம் எல்லோரும் உயிருடன் இருக்க வேண்டும்,'' என்று அவர் மேலும் கூறினார். (உ-5)

மேலும் : பக். 02

## நாசமாய் போங்கள்

### மண் அள்ளித் தூற்றிய தாய்

''நான் சத்தியமாய் சொல்கிறேன், எங்கள் காணியைப் பிடித்து வைச்சிருக்கிற நீங்கள் எல்லாம் நாசமாய் போவீர்கள். வயிறெரிந்து சொல்கிறேன்'' என்று கூறி மண் அள்ளி வீசித் தூற்றினார் வயதான தாய் ஒருவர். வலி. வடக்கு மக்களின் காணிகளைச் சுவீகரிப்பதற்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்ட அவர், இறுதியில் உணர்ச்சிவசப்பட்டுக் கொந்தளித்தார். மக்கள் ஊர்வலம் செல்லாத வகையில் பொலிஸார் அவர்களைத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையம் முன்பாக தடுப்பிட்டு மறித்தனர். அப்போதே தனது கட்டுப்பாட்டை இழந்த அந்தத் தாயார் உணர்ச்சிவசப்பட்டார்.



''நான் இது வரை பல வீடுகள் மாறிப் போய் விட்டேன். என் வீட்டை நீங்கள் பிடித்து வைத்திருக்கிறீர்கள். நான் வீடிருந்தும் அகதியாய் திரிகிறேன்'' என்று அவர் அழுதார்.

## மின்சாரக் கட்டணத்தை குறைக்க அரசு முடிவு

கொழும்பு, ஏப்.30
மின்கட்டண உயர்வை மீள்பரிசீலனை செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி, புதிய சீர்திருத்த விலை குறித்தான தகவல்களை வெளியிடுவதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது என அறியமுடிகின்றது.

மேலும் : பக். 02

## கூட்டமைப்பின் மே தினம் கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம்,ஏப்.30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கிளிநொச்சி பிரதேச சபையில் நடைபெறவுள்ளது.

இதில் உழைக்கும் வர்க்கத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து குரல் எழுப்பப்படவுள்ளது.

பிரதேச சபை உறுப்பினர்கள், உழைக்கும் வர்க்கத்தினர், பொதுமக்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## பொது பல சேனாவுக்கு நோர்வே உதவவில்லை

கொழும்பு,ஏப் 30
பொது பல சேனாவுக்கு நிதி உள்ளிட்ட எந்தவொரு உதவிகளையும் வழங்கவில்லை என நோர்வே அரசு தெரிவித்துள்ளது. பொது பல சேனாவுக்கு நோர்வே உதவியளிப்பதாக வெளியான செய்திகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் நோர்வே தெரிவித்துள்ளது.

இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இனங்களுக்கு எதிராகச் செயற்படும் எந்தவொரு அமைப்புக்கும் உதவியளிக்கப்படமாட்டாது என நோர்வே அரசு கூறியுள்ளது என நோர்வே தூதரகத்தின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் : பக். 02

## இன - மத வாதத்துக்கு எதிராக கொழும்பில் மே தின ஊர்வலம்

கொழும்பு, ஏப்.30
கொழும்பில் இன, மதவாதத்திற்கு எதிராக ஜனநாயக மக்கள் முன்னணி, நவ சமசமாஜ கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள், அரசு - தனியார்துறை தொழிற்சங்கள், வெகுஜன அமைப்புகள், பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து தலைநகரில் மேதின ஊர்வலத்தையும், கூட்டத்தையும் நடத்த உள்ளன.

இந்த ஊர்வலத்திலும், கூட்டத்திலும் கொழும்பில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் திரண்டு கலந்து கொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் : பக். 02

## இலங்கையின் மீறல்கள் அடுத்த 'குண்டு' இன்று

நியூயோர்க், ஏப்.30
இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள், தற்போதும் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்த புதிய அறிக்கையை சர்வதேச மன்னிப்புச் சபை இன்று வெளியிடவுள்ளது.

லண்டனில் வைத்தே இந்த அறிக்கை வெளியிட உள்ளது. அரசுக்கு எதிராக செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்கள் மீதான மிரட்டல்கள் குறித்தும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கு பாதுகாப்பு வலயத்துக்குள் அதிரடியாக நுழைய முயன்ற மக்கள்

## தடைகளைப் போட்டு நிறுத்தினர் பொலிஸார்





யாழ்ப்பாணம், ஏப்.30

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய வலி. வடக்கு மக்கள் உணர்வு மேலீட்டினால் திடீரென உயர்பாதுகாப்பு வலயம் நோக்கிப் பேரணியாகச் செல்ல முற்பட்டனர். ஆயினும் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மக்களைத் தடுத்து நிறுத்தினர் பொலிஸார்.

இதன் பின்னர் மக்கள் மீண்டும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் முன்பாகப் போராட்டம் நடத்தி விட்டுக் கலைந்து சென்றனர்.

வலி.வடக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவத்தினர் சுவீகரிப்பதைக் கண்டித்துத் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் முன்பாக வலி.வடக்கு மீள் குடியேற்றக் குழுவால் முற்றுகைப் பேராட்டம் நேற்று நடத்தப்பட்டது. நேற்றுக் காலை 7.30 மணி முதல் மக்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் முன்பாகக் குவிந்தனர்.

**மிரட்டிய புலனாய்வாளர்கள்**

பருத்தித்துறையிலுள்ள வலி.வடக்கு மக்கள் மினி பஸ் மூலமாகவே தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு அழைத்துவரப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் மினி பஸ் உரிமையாளர்கள் சிலர் புலனாய்வாளர்களால் மிரட்டப்பட்டதால் குறைவான மினி பஸ்களே மக்களை ஏற்றி இறக்கின.

பருத்தித்துறையில் போராட்டத்தில் பங்கெடுப்பதற்காக மக்களை ஏற்றிவந்த மினி பஸ்ஸை மறித்த புலனாய்வாளர்கள் பஸ்ஸிலிருந்த மக்களை மிரட்டி இறக்கித் திருப்பியனுப்பியுள்ளனர்.

இந்தத் தடைகளையும் மீறி ஆயிரக்கணக்கான மக்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் முன்பாகக் குவிந்தனர். மக்களின் இந்தப் போராட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், சி.சிறீதரன் ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் பாஸ்கரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**கோஷங்கள்**

'அப்பு ஆச்சி ஆண்ட மண்ணை இராணுவம் ஆழ்வதா?', '6381 ஏக்கர் உன் பாட்டன் சொத்தா?', 'காணி அபகரிப்பு நல்லிணக்கமா?', 'சிவசுவாமியே நீ அபகரிப்பு சாமியா?' 'இந்த மண் எங்களின் சொந்தமண்', 'அரசே உனது காணிச் சட்டம் எமது வாழ்விடங்களைப் பறிக்கவா?', 'இராணுவமே எமக்கு கஞ்சி உனக்கு யோக்கட்டா', 'நாங்கள் எங்கள் வீட்டுக்குச் செல்ல நீங்கள் உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்', 'ஆசியாவின் ஆச்சரியம் காணி அபகரிப்பா?' ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை மக்கள் தாங்கிப் பிடித்திருந்தனர்.

முற்பகல் 11 மணியளவில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தெல்லிப்பழை பிரதேச செயலக வாசலை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். 'இராணுவமே வெளியேறு' என்ற கோஷத்தை எழுப்பிய மக்கள் திடீரென உணர்வு மேலீட்டால் கே.கே. எஸ் வீதி வழியாக உயர் பாதுகாப்பு வலயம் நோக்கிப் பேரணியாகச் சென்றனர்.

இதனால் திடீரென கே.கே. எஸ்.வீதியுடனான போக்குவரத்து முற்றாக முடக்கப்பட்டது. மக்கள் ஆவேசமாக கோஷங்களை எழுப்பியவாறு முன்னேறிச் சென்ற போதும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக தடைகளை ஏற்படுத்திப் பொலிஸார் மறித்தனர்.

அத்துடன் கலகமடக்கும் பொலிஸாரும் அந்த இடத்தில் குவிக்கப்பட்டனர். தடையில் வைத்து பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. பொலிஸாரின் தடையை மீறிச் செல்ல முடியாததால் மக்கள் தெல்லிப்பழை பிரதேச செயலக முன்றலுக்கே திரும்பினர்.

தெல்லிப்பழை பிரதேச செயலக வாசல் முன்பாக கோஷங்களை எழுப்பிய மக்கள் ஒரு மணியளவில் கலைந்து சென்றனர். (த-5-86)

## வழக்குத் தாக்கல் செய்ய ஆவணங்களை தாருங்கள்

### வலி.வடக்கு தவிசாளர் கோருகிறார்

யாழ்ப்பாணம், ஏப்.30

வலி.வடக்கு மக்களின் காணி சுவீகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதால் பொது மக்களை அதற்குரிய ஆவணங்களை கொண்டு வந்து தருமாறு வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் அறிவித்துள்ளார். மல்லாகத்திலுள்ள வலி. வடக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கும் பருத்தித்துறையிலுள்ள, மயிலிட்டி மீனவ சங்கத்தில் நாளை மறுதினம் 2 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கும் மக்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மக்கள் தமது காணி உறுதியின் பிரதி மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி என்பவற்றைக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-5)


## பொது பல சேனாவுக்கு நோர்வே உதவவில்லை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை உட்பட எந்தவொரு நாட்டிலும் இன மத பேதங்களை ஏற்படுத்தவோ அல்லது அமைதியைச் சீர்குலைக்கும் விதமாகவோ நோர்வே எந்தவொரு பங்களிப்பையும் வழங்கவில்லை.

அத்தடன் முஸ்லிம்களுக்கு எதிரான எந்தவொரு நிகழ்ச்சிநிரலும் நோர்வேயிடம் கிடையாது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

எனினும், பொது பல சேனாவின் உறுப்பினர்களுக்கு தமது நாடு சில வருடங்களுக்கு முன்னர் அழைப்பு விடுத்தமையையும் அவர்



கள் அங்கு வந்தமையையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த பிக்குகள் உள்ளிட்ட எட்டு பேர் கொண்ட குழுவானது பேச்சுக்காகவே அழைக்கப்பட்டதாகவும் அவர்களுக்கு நோர்வே எவ்வகையிலும் நிதி உதவி வழங்கவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## மின்சாரக் கட்டணத்தை குறைக்க அரசு முடிவு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்கட்டண அதிகரிப்பையடுத்து அரசுக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அரசின் பங்காளிக் கட்சிகள்கூட மின்கட்டண உயர்வுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கின. இதனால் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. குறிப்பாக, எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் மே தின பேரணிகளைக்கூட மின்கட்டண உயர்வுக்கு எதிராக நடத்தவிருந்தன. அத்துடன், அரசின் ஆதரவாளர்கள்கூட மின்கட்டண உயர்வுக்கு எதிராக கருத்துகளை வெளியிட்டுவருகின்றனர்.

இந்நிலையில், மின்கட்டண உயர்வு விவகாரம் சம்பந்தமாக நேற்று தமது ஆலோசகர்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மந்திராலோசனை நடத்தியுள்ளார். இதனையடுத்தே மின்கட்டண உயர்வில் திருத்தம் கொண்டுவருவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசின் ஊடகவியலாளர் மாநாடொன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. இதன் போது இது குறித்தான அறிவிப்பு விடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, மின் கட்டண அதிகரிப்பில் சிறியளவு மாற்றத்தை கொண்டுவந்து மக்களை ஏமாற்றுவதற்கு அரசு முயற்சிக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

## சூட்டுக் காயத்துடன் சிப்பாய் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.30

தன்னைத்தானே சுட்டு கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று இராணுவத் தரப்புத் தெரிவித்துள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்காகி கடற்படைச் சிப்பாய் உயிரிழந்தார் என்று நேற்று செய்திகள் வெளியாகியிருந்தன. ஆயினும் அவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார் என இராணுவத்தரப்பு தெரிவித்தது. அனலைதீவு கடற்படை முகாமில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்தில் சிதில இமிடியாறோ தோம் நயண கோந்த (வயது-25) என்ற சிப்பாயே உயிரிழந்தார்.

பல குண்டுகள் அவரது உடலில் பாய்ந்துள்ளன என்று வைத்தியசாலையில் தகவல்கள் கூறுகின்றன. காயங்களுடன் அவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட போது அது பயனளிக்காது அவர் உயிரிழந்தார் என்று நீதிவானிடம் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (உ-4)

**பல குண்டுகள் அவரது உடலில் பாய்ந்துள்ளன என்று வைத்திய சாலையில் தகவல் கள் கூறுகின்றன**

## பொலிஸார் மூவர் கைது

கொழும்பு,ஏப் 30

பொலிஸார் மூவர் குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸாரினால் (சி.ஐ.டி) நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, கோமரங்கடவல பம்பரகஸ்வெகாட்டில் 2008 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி இடம்பெற்ற முக்கொலை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கே சந்தேகத்தின் பேரிலேயே இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (த)

## இன - மத வாதத்துக்கு எதிராக கொழும்பில் மே தின ஊர்வலம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோ கணேசன், விக்கிரமபாகு கருணாரத்ன, அசாத் சாலி ஆகிய கட்சித் தலைவர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், ஜனநாயக மக்கள் முன்னணியின் மாகாணசபை, மாநகரசபை, [illegible] மக்கள் பிரதிநிதிகளும் மூன்று கட்சிகளினதும் அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும் கலந்து கொள்ளும் இந்த மேதின நிகழ்வு தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியதாவது -இனவாதத்தையும், மத வாதத்தையும் எதிர்க்க இன்று தமிழ், முஸ்லிம் மக்களுடன் பெருந்தொகையான சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களும் எம்முடன் கரங்கோத்துள்ளன. கொழும்பில் சிங்கள சகோதர மக்களுடன் சமத்துவமாக ஒற்றுமையுடன் வாழ தமிழ், முஸ்லிம் மக்கள் தயார் என்ற செய்தியை நமது கூட்டு மேதினம் மூலம் நாம் அறிவிப்போம்.

ஆகவே, இந்த மேதின நிகழ்வில் கொழும்பில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் அணிதிரண்டு கலந்துகொண்டு எங்கள் கரங்களை பலப்படுத்த வேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன் - இப்படி அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடமாகாண சபைத் தேர்தல்; உறுதியாவதற்கு உரிய அறிகுறி...?

வடமாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படும் என்று அட்சரம் தவறாது ஜனாதிபதி ஊடகங்களுக்கு தகவல் தெரிவித்து வருகிறார். ஆனால் அது குறித்த முறைப்படியான- உத்தியோகபூர்வ- அறிவித்தல் கிடைத்த பின்னரே அதற்கான முன்னோட்ட ஏற்பாடுகளைச் செய்ய இயலும் என்று தேர்தல் ஆணையாளர் வெளியிடும் கருத்துக்கள் சுட்டி நிற்கின்றன.

இத்தகைய நிலையில், தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளை- மக்களின் வாக்குகளைத் தமதாக்கிக் கொள்வதற்கு- பம்பரம் போன்று சுழன்று செயற்படத் தொடங்கிவிட்டன அரசியல் கட்சிகள்.

மிகக் குறிப்பாகத் தென்னிலங்கை அரசியல் வாதிகள், தலைவர்கள் உட்பட வடக்கில் குறுகியகால முகாமிடுதலைத் தொடங்கிவிட்டார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமும் வடக்கு மக்களின் நாடிகளைப் பிடித்துப் பார்க்கும் கைங்கரியத்தில் தத்தமது கட்சிகளுக்கு வேட்பாளர்களை இனங்காணும் படலத்தை ஏற்கனவே ஆரம்பித்துச் சென்றுள்ளார்கள்.

அவர்களைத் தொடர்ந்து தெற்கில் தலைமை நிலையங்களைக் கொண்டுள்ள கட்சிகளும் தமது ஆரம்பப் பணிகளைத் தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தனது சார்பில் பொருத்தமான வேட்பாளர்களைத் தேர்ந்து எடுப்பதற்கு முன்னேற்பாடாக, தேர்தலில் போட்டியிட விருப்பம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது தனித்துப் போட்டியிடுவதா என்பது குறித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி இதுவரை முடிவு எதனையும் மேற்கொள்ளவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய உத்தேச வடக்குத் தேர்தல் புலத்தில், வடக்கு மாவட்டங்களைச் சேர்ந்த எம்மவர்களில் பலர் எந்தப் பக்கத்தில் நின்று காவடி தூக்குவார்கள் என்பது இன்னும் சில வாரங்களில் வெளிச்சத்துக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

1987 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த ராஜீவ்-ஜே.ஆர் ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாண சபையின் முதலும் கடைசியுமான 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலின் பின்னர், இப்போது தான் இங்கு தேர்தல் நடைபெற உள்ளதாக நம்ப வைக்கும் பொருட்டான அறிவித்தல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இரண்டாவது அரசின் முதல் சில மாதங்களில், அதன் அங்கங்களில் ஒன்றான விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி கட்சியினால் தொடரப்பட்ட வழக்கில், வடக்கு- கிழக்குப் பிரிக்கப்பட்டு- இரண்டாகத் துண்டாடப்பட்டதால், வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. இதே வேளை, கிழக்கு மாகாண சபைக்கு இரண்டு தடவைகள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் மூலம் ஆட்சி நடைபெற்றது, நடைபெறுகிறது.

ஆனால் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் குறித்து, அரசின் உள்ளார்ந்த அரசியல் சதிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அது குறித்து எந்தவித அக்கறையும் காட்டப்படவில்லை. அதுவே இதுவரை நடந்தேறிய உள்நோக்கத்துடனான சதி எனில் தப்பன்று.

போருக்குப் பின்னரான புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் என்ற பதாகைகளைக் காட்டி, வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்துவதை பின் கோடிக்குச் சாமர்த்தியமாக, இல்லை இல்லை திட்டமிட்ட முறையில், அரசு பின்தள்ளி வந்தது.

அனைத்துலக நாடுகளின் பல தரப்பட்ட அழுத்தங்களை தாங்கிக் கொள்ள இயலாத நிலையில், இப்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முனைந்துள்ளது; சொந்தத்தில் விருப்பத்துடன் முன்வரவில்லை என்பதே தள நிலை.

மொத்தத்தில், இந்தத் தேர்தலில் அரசாங்கக் கட்சியும் போட்டியிட்டு, தனக்கு வடக்குத் தமிழ் மக்களின் ஆதரவு உண்டு என்று காண்பிக்க வேண்டிய தேவையும் அரசுக்கு உண்டு. அதனால் எதிர்வரும் செப்ரெம்பரில் தேர்தல் என்று மேளம் தட்டுகிறது. அது நடத்தப்படும் என்று உத்தியோகபூர்வமாக உறுதிபடத் தெரிவிப்பதற்கு (confirm) இன்னும் எத்தனை மாதங்கள் செல்லும் என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஆனால் ஒன்றுமட்டும் உண்மையிலும் உண்மை. வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக வடக்கு மக்களின் பூர்வீகக் காணிகளைத் தனக்குள்ள அதிகார பலத்தின் மூலம் அரசுடைமை ஆக்குவதிலும், வடக்கின் பல மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதிலும் வட மாகாணத்தின் பல பிரதேசங்களை இராணுவ மயப்படுத்துவதிலும் ஆகக் குறைந்தது ஐம்பது, அறுபது வீதத்தைப் பூர்த்தி செய்வதிலுமே அரசின் முழுதார்ந்த கவனமும் செயற்பாடும் மேலோங்கும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். எதற்கும் உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியாவதற்கு இன்னும் பல வாரங்கள் காத்திருக்க நேரிடலாம்.

# யாழ். மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## ஒருமாத காலத்தில் நடமாடும் சேவை மூலம் கிடைக்கும் என்று ஹக்கீம் தெரிவிப்பு



“ யாழ். மாவட்டத்துக்கு இரு நாள் பயணமாக வந்த நீதி அமைச்சர் ஹக்கீம் , யாழ். மாவட்டத்தில் மீள் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களை கடந்த வெள்ளிக் கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக இன்னும் ஒரு மாத காலத்தினுள் நடமாடும் சேவை நடத்தப்படும்.

அதற்கு உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு இரு நாள் பயணமாக வந்த நீதி அமைச்சர் ஹக்கீம் , யாழ். மாவட்டத்தில் மீள் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களை கடந்த வெள்ளிக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் போது மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் ஆராயப்பட்டது.

குறிப்பாக மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் உள்ள முட்டுக்கட்டையான நிலைமை தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உரிய அரச அதிகாரிகள் சகலரையும் உள்ளடக்கி நடமாடும் சேவை ஒன்றை நடத்தி மீள் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும்.-என்றார். (ம-5)

## தனியார் காணித் துப்புரவுக்கு தொழிலாளர்களை நியமிக்குக

### யாழ். மாநகர சபையின் எதிரணி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ். மாநகர பிரதேசத்தில் தனியார் காணிகளை துப்புரவு செய்வதற்கென தனியாக தொழிலாளர்களை நியமிக்க வேண்டும்.

இவ்வாறு மாநகர சபையின் ஏப்ரல் மாதத்துக்கான மாதாந்தக் கூட்டத்தில் எதிர்த் தரப்பு உறுப்பினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மாநகர சபைப் பகுதியில் உள்ள வெற்றுக் காணிகளைத் துப்புரவு செய்வதற்கு மாநகர தொழிலாளர்களே ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

துப்புரவு செய்யப்படும் காணிகளுக்கு அதற்கான நிதியை மாநகர சபை அறவிட்டும் வருகின்றது.

இந்த நிலையில் காணிகளை துப்புரவு செய்வதற்கு தனியாக தொழிலாளர்கள் நியமித்து, அவர்களுக்கு அதற்குரிய கொடுப்பனவை மாநகர சபை வழங்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (ம-17)

“ துப்புரவு செய்யப்படும் காணிகளுக்கு அதற்கான நிதியை மாநகர சபை அறவிட்டும் வருகின்றது.

## ஐக்கிய தேசியக் கட்சிக்கு யாழ். மாவட்ட அமைப்பாளர்

தென்மராட்சி,ஏப்.29

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக சாவகச்சேரி பிரதேச சபையின் ஐ.தே.கட்சி உறுப்பினர் குமார் சர்வானந்தன் கட்சியின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் சாவகச்சேரி தொகுதியின் பின்வரும் இடங்களுக்கு இணைப்பாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அ.கலைச்செல்வன்-கொடிகாமம், கா.இராசதுரை-கரம்பகம், எழுதுமட்டுவாழ், ச.சசீந்திரன்-வரணி, ச.சாந்தகுமார்-பச்சிலைப்பள்ளி, செ.பொன்னுத்துரை-பாலாவி, ம.ஜசிந்தன்-மந்துவில், த.இந்திரன்- கச்சாய், த.நடராசா- தவசிகுளம், எஸ்.கிரி-நாவற்குழி.(ம-9)

# இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு 2 ஆம் கட்டமாக 13 பேர் தெரிவாகினர்

## அவர்களில் தமிழர்கள் எவரும் இல்லை

அச்சுவேலி, ஏப். 30

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கு 2010 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட (திறந்தநிலை) போட்டிப் பரீட்சையில் இருந்து 2 ஆம் கட்டமாக 13 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தமிழர்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. 11 பேர் சிங்களவர்கள் 2 பேர் முஸ்லிம்.

தெரிவு செய்யப்பட்டுள்ள 13 பேரில் தமிழ்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றி இரண்டு பேரும், சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய 11 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஒருவர் பொது நிலையிலும் ஒருவர் திட்டமிடல் துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாடத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 4 பேர் விஞ்ஞான பாடத்துக்கும், 2 பேர் கணித பாடத்துக்கும், 2 பேர் தகவல் தொழில்நுட்பம் பாடத்துக்கும், கீழைத்தேச சங்கீதம், விவசாயம், வர்த்தகம் ஆகிய பாடத்துறைகளுக்கு தலா ஒவ்வொருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட (திறந்தநிலை) போட்டிப் பரீட்சையின் மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு 104 பேரைத் தெரிவு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 43 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதில் 38 பேர் சிங்களவர், 5 பேர் தமிழர், முஸ்லிம் எவரும் இல்லை.

இரண்டாம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 13 பேருக்கும் மே மாதம் 15 ஆம் திகதியில் இருந்து நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்களின் பெயர் விவரம் இலங்கை பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்து செயற்படத் தயார்

## இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினை குறித்து சீனா கருத்து

பீஜிங், ஏப்.30
சீனா - இந்திய எல்லைப் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான நிலைமையை தணிப்பதற்கு இந்தியாவுடன் இணைந்து செயற்படத் தயராக உள்ளோம் என்று சீனா அறிவித்துள்ளது.
காஷ்மீரின் லடாக் பகுதியில் இந்திய எல்லைப் பகுதிக்குள் சீன இராணுவம் ஊடுருவியுள்ள பிரச்சினை குறித்து பேச்சுக்கள் மூலம் தீர்வு காண முடியும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருந்த கருத்துக்குப் பதிலளிக்கும் விதமாகவே சீனா இவ்வாறு தெரிவித்துள்ளது.
இதுகுறித்து சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
''தற்போது சீன - இந்திய எல்லைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் விடுத்துள்ள அறிக்கையை கவனத்தில் கொண்டுள்ளோம். இந்தியா,சீனா உறவு ஆரோக்கியமாக வளரவும், இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்படும் முயற்சியாக, எல்லையில் அமைதியை கடைபிடிக்கவும், வேறுபாடுகளைக் களையவும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட சீனா தயாராக இருக்கிறது.
கடந்த சில ஆண்டுகளாக நட்பு ரீதியான ஒத்துழைப்பு வளர்ந்து வருகின்றது. எல்லைப் பிரச்சினை உட்பட இதர வேறுபாடுகளை களையவும் இந்தியாவும், சீனாவும் பாடுபட்டு வருகின்றன. எல்லையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண இரு தரப்புகளுக்கும் இடையே தூதரக அளவிலும் எல்லைப் பகுதியிலும் பேச்சுக்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது,'' - என்றுள்ளது.(ற)



## இத்தாலி பிரதமர் அலுவலகத்தில் துப்பாக்கிச் சூடு

ரோம், ஏப்.30
நேற்றுமுன்தினம் இத்தாலிப் பிரதமர் அலுவலகம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அங்கு கடமையில் இருந்த இரண்டு பாது காவலர்கள் படுகாயமடைந்துள்ளனர்.
நீண்ட நாள் அரசியல் குழப்பத்தின் பின்னர் தற்போது பிரதமராக என்ரிகோ லெட்டா தேர்வு செய்யப்பட்டுள் ளார். அவர் தலைமையிலான அமைச்சரவை நேற்றுமுன் தினம் ஜனாதிபதி மாளிகையில் பதவியேற்றது. அந்த நேரத்திலேயே ரோம் நகரில் உள்ள பிரதமர் அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.
துப்பாக்கிச் சூட்டில் பிரதமர் அலுவலகத்தில் கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகள் இருவர் படுகாயமடைந்துள்ளனர். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர் தற்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)


# சர்ச்சைக்குரிய தீவுகள் மேல் பறந்த 40 சீனப் போர் விமானங்கள்

டோக்கியோ, ஏப்.30
சீனாவும், ஜப்பானும் உரிமை கோரிவரும் சர்ச்சைக்குரிய ஒகிநாவா தீவுக் கூட்டத்தைக் கைப்பற்றும் முயற்சியில் சீனா இறங்கியுள்ளது என்று கூறப்படுகிறது.
இந்தத் தீவுக் கூட்டம் தற்போது ஜப்பானின் ஆதிக்கத்துக்குள் உள்ளது. எனினும் அந்தத் தீவுக் கூட்டம் தமது நாட்டுக்கே சொந்தமானது என்று சீனா கூறிவருகின்றது. அதனால் இருநாடுகளுக்கும் இடையே இந்த விடயத்தில் முறுகல் நிலை நிலவி வருகிறது.
இந்தநிலையில் தீவுகளைக் கைப்பற்றும் முயற்சிகளில் சீனா ஈடுபட்டுள்ளது என்று கூறப்படுகிறது. சீனாவின் போர்க்கப்பல்கள் தீவுகளுக்கு அருகே நிலைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் சீனாவின் 40 போர் விமானங்கள் தீவுகளுக்கு மேலாகப் பறப்பில் ஈடுபட்டன என்றும் தகவல்கள் தெரிவிக்கிறன.
சீனப் போர் விமானங்களின் பறப்பை அடுத்து ஜப்பானும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று கூறப்படுகிறது. அந்தப் பகுதியின் கண்காணிப்பையும் அதிகரித்துள்ளதாக ஜப்பான் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.
எனினும் இதுகுறித்து சீனா எந்தவித தகவல்களை வெளியிடவில்லை. (ற)

## ஐஸ்லாந்து தேர்தலில் வலதுசாரிகள் வெற்றி



ரெய்க்னவிக், ஏப்.30
ஐஸ்லாந்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய வலதுசாரி எதிர்க் கட்சிகள் வெற்றிபெற்றுள்ளன.
ஏறத்தாழ அனைத்து வாக்குகளும் எண்ணப்பட்டுள்ள நிலையில் சுதந்திரக் கட்சி 26.7 வீத வாக்குகளையும், முற்போக்கு கட்சி 2.47 வீத வாக்குகளையும் பெற்றுள்ளன.
இதன்மூலம் 63 ஆசனங்களைக் கொண்ட ஐஸ்லாந்து நாடாளுமன்றத்தின் 40 ஆசனங்களை மத்திய வலதுசாரி கட்சிகள் கைப்பற்றியுள்ளன.
ஆளும் சமூக ஜனநாயக கட்சி ஏறத்தாழ 13 வீத வாக்குகளையே பெற்றுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.
ஐஸ்லாந்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவே ஆட்சி மாற்றத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



பாகிஸ்தானின் பெஷாவர் பகுதியில் உள்ள அரசியல் கட்சி அலுவலகம் ஒன்றின்முன் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் நால்வர் உயிரிழந்தனர். தாக்குதலுக்கு தலிபான்கள் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

## லிபியாவில் மக்கள் முற்றுகை

திரிபோலி, ஏப்.30
லிபியாவில் அரச உயர் பதவிகளில் உள்ளவர் களை பணி நீக்கம் செய்து புதியவர்களை நியமிக்க வேண்டும் என்று கோரி லிபிய வெளியுறவுத் துறை அமைச்சுக் கட்டடத்தைப் பொது மக்கள் முற்றுகையிட்டுள்ளனர்.
லிபியாவில் முன்னாள் ஜனாதிபதி கடாபி கடந்த 2011ஆம் ஆண்டு புரட்சி யின் முடிவில் படுகொலை செய்யப்பட்டார். எனி னும் அதன் பின்னர் அமைக் கப்பட்ட ஆட்சியில், கடாபி யின் பதவிக்காலத்தில் பணியமர்த்தப்பட்டவர்களே அனைத்து துறைகளிலும் உயர் பொறுப்புகளை வகித்து வருகின்றனர். அவர்களை பணி நீக்கம் செய்ய வகை செய்யும் புதிய சட்டத்தை இயற்ற வேண்டும் என்று கோரி கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்றத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டனர்.
இந்தநிலையில் நேற்று முன்தினம் நவீன துப்பாக்கிகளுடன் சென்ற பொது மக்கள் லிபியாவின் வெளியுறவுத் துறை அமைச்சக கட்டடத்தை முற்றுகையிட்டனர். கடாபியின் ஆதரவாளர்களை பணி நீக்கம் செய்யாவிட்டால், இதர அமைச்சக கட்டடங்களையும் விரைவில் முற்றுகையிடுவோம் எனவும் எச்சரித்துள்ளனர். (ற)

## தொலைக்காட்சி அலைவரிசைகள் ஈராக்கில் இரத்து

பாக்தாத், ஏப்.30
பத்து தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு ஈராக்கில் தடை விதிக்கப்பட் டுள்ளது. அந்த அலை வரிசைகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்களும் அரசால் இரத்து செய்யப்பட்டது.
ஈராக்கில் அண்மைக் காலமாக சன்னி மற்றும் ஷியா முஸ்லிம்களுக்கு இடையே மோதல்கள் 'அதிகரித்துள்ளன.
இந்த இரு பிரிவினருக்கும் இடையே இடம்பெறும் மோதல் சம்பவங்களை அங்குள்ள தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் மிகைப்படுத்தி செய்திகள் வெளியிடுகின்றன என்று தெரிவித்தே தொலைக்காட்சி அலைவரிசைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ற)

# நிரந்தரமாக மூடப்பட்டது கொரிய தொழிற்பூங்கா

பியாங்யாங், ஏப்.30
வட கொரியா மற்றும் தென் கொரியா இணைந்து நடத்தும் கேசாங் தொழிற்பூங்கா நிரந்தரமாக மூடப்படுகின்றது என்று வடகொரியா தெரிவித்துள்ளது.
தொழிற்பூங்கா குறித்து பேச்சுக்கள் நடத்துவதற்கு தென்கொரியா விடுத்திருந்த அழைப்பை வடகொரியா நிராகரித்ததை அடுத்து அங்கிருந்த தமது 170 தொழிலாளர்களை தென்கொரியா திரும்ப அழைத்திருந்தது.



அதையடுத்து தொழிற்பூங்காவின் அனைத்து செயற்பாடுகளையும் முழுமையாக நிறுத்துவதாக அறிவித்துள்ள வட கொரியா, அந்த முடிவு எடுக்கப்பட்டமைக்கு தென் கொரியாதான் காரணம் என்றும் தெரிவித்துள்ளது.
வடகொரியாவின் இந்த முடிவால் சமாதானப் பேச்சுகளுக்கு இருந்த இறுதி வாய்ப்பும் நழுவிப் போயுள்ளது என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
ஆண்டிற்கு 90 மில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டித் தரும் இந்த தொழிற்பூங்கா வட கொரியாவின் மிகச் சிறந்த பொருளாதார திட்டமாக கருதப்படுகிறது. இந்த திட்டத்திற்கு கணிசமான [illegible] பிடத்தக்கது. (ற)

# முஷாரப்பை கடத்த தலிபான்கள் திட்டம்

இஸ்லாமாபாத், ஏப்.30
பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை கடத்துவதற்கு தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர் என்று அந்த நாட்டு புலனாய்வு அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.
பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் அவரது வீட்டில் பர் வேஸ் முஷாரப் தடுத்து வைக் கப்பட்டுள்ள நிலையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
குறித்த வீட்டில் இருந்து [illegible] அழைத்துச் செல்லும்போது தடைசெய்யப்பட்ட பாகிஸ்தான் தலிபான்கள் முஷாரப்பை கடத்த முயற்சி செய்யலாம் என்றும் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை பர்வேஸ் முஷாரப் நாடு திரும்பினால் கொலை செய்யப்படுவார் என்று அவர் லண்டனில் இருந்து நாடு திரும்புவதற்கு முன்னர் தலிபான்கள் எச்சரித்திருந்தனர். எனினும் இந்த அச்சுறுத்தல்களையும் மீறி நான்கு ஆண்டுகளின் பின்னர் கடந்த மாதம் அவர் பாகிஸ்தான் திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலி.கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு முன்

# பஸ் தரிப்பிட வசதி இல்லை வெயிலில் தவிக்கும் மக்கள்

அச்சுவேலி,ஏப்.30

வலி.கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக பொதுமக்கள் தங்கி நின்று பஸ் பயணத்தை தொடர்வதற்குப் பொருத்தமான பஸ்தரிப்பிடம், நிழல்குடை நிறுவப்படவில்லை. பிரதேச செயலகத்துக்கு வருகை தரும் பொதுமக்களும் பிரதேச செயலகத்தில் கடமை புரிவோரும் கொதிக்கும் வெயிலில் தெருவோரத்தில் நீண்ட நேரம் கால்கடுக்க காத்து நின்றே பஸ் பயணத்தை தொடர்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.



கோப்பாயில் அமைந்துள்ள பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதி விஸ்தரிக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டபோது பஸ்தரிப்பிட நிழல்குடை இடித்து அகற்றப்பட்டது. வீதி புனரமைக்கப்பட்ட பின்னர் அது மீண்டும் நிறுவப்படவில்லை. வீதியோரத்தில் நிழல் மரங்களும் இல்லை. இந்த நிலையில் கொதிக்கும் வெயிலில் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்து நிற்கின்றனர்.

அண்மைக்கால வெயிலில் தெருவோரத்தில் நீண்ட நேரம் காத்து நிற்பதால் வயோதிபர்கள் மற்றும் உடல் நலம் குறைந்தோர் மயங்கி விழுந்து விடுவதோடு மேலதிக தாக்கத்துக்கும் உள்ளாகி வருகின்றனர்.

நாளாந்தம் பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் பிரதேச செயலகத்துக்கு முன்பாக பஸ்தரிப்பிட நிழல் குடை இல்லாமல் இருக்கும் குறைபாட்டை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-11)

## தொலைபேசி இணைப்பு இதுவரை கிடைக்கவில்லை

### வடமராட்சி கிழக்கு உபதபாலகங்களுக்கு

வடமராட்சி,ஏப்.30

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள உபதபால் நிலையங்களுக்கு இதுவரையில் தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இந்தப் பிரதேசத்தில் குடத்தனை, நாகர்கோவில், செம்பியன்பற்று, தாளையடி, ஆழியவளை, சுண்டிக்குளம், முள்ளியான் ஆகிய 7 உபதபால் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுண்டிக்குளம் பகுதியில் மீள்குடியேற்றத்துக்குத் தடை விதிக்கப்பட்டதால் சுண்டிக்குளம் உபதபால் நிலையம் மாத்திரம் கேவில் என்ற இடத்தில் செயற்பட்டு வருகின்றது. ஏனையவை சொந்த இடங்களிலேயே இயங்குகின்றன.

போருக்கு முந்திய காலத்தில் 7 உபதபால் நிலையங்களில் குடத்தனை, நாகர்கோவில், தாளையடி, ஆழியவளை ஆகிய 4 உபதபால் நிலையங்களுக்குக் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இவற்றில் குடத்தனை, நாகர்கோவில் உபதபால் நிலையங்களுக்கு பருத்தித்துறை தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்திலிருந்தும் தாளையடி, ஆழியவளை உபதபால் நிலையங்களுக்குப் பளை தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்திலிருந்தும் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

இடப்பெயர்வுக்குப் பின்னர் உபதபால் நிலையங்கள் மீளச் செயற்படத் தொடங்கிய போதிலும் இவற்றுக்குத் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவில்லை. அதனால் இந்தப் பிரதேசத்திலிருந்து பிற இடங்களுக்கு தந்திச் செய்திகளை அனுப்ப முடியாததுர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. (ந-8)

## வெப்பநோயின் தாக்கம் வடமராட்சியில் அதிகம்

வடமராட்சி,ஏப்.30

கடுமையான வெப்பத்தையடுத்து வடமராட்சிப் பிரதேசத்தில் வெப்பநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியப் பணிப்பாளர் டாக்டர் தா.வினோதன் தெரிவித்தார்.

**வெப்பத்தின் காரணமாக ஒரு வகையான வைரஸ் காய்ச்சல், தொண்டைவலி உள்ளிட்ட பல்வேறு நோய்கள் அதிகரிப்பு**

வெப்பத்தின் காரணமாக ஒரு வகையான வைரஸ் காய்ச்சல், தொண்டைவலி உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு உள்ளானோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த ஒரு வாரகாலமாக முன்னைய காங்களிலும் பார்க்க மிகக் கூதலான வெப்பம் நிலவுவதாக பிரதேச மூத்த பிரஜைகள் பலரும் கருத்துத் தெரிவித்தனர். (ந-8)



வடமராட்சி வடக்கு அதிபர்கள் சங்கம் நடத்திய பிரிவுபசார விழாவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரனுக்கு [illegible] மகா வித்தியாலய அதிபர் க.செல்வதேவன் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (ந-8)

## புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.30

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் மேற்கொண்டுள்ளார். (ந-41)

## வரி தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு

வடமராட்சி, ஏப்.30

யாழ். குடாநாட்டில் வரி சம்பந்தமான விழிப்பூட்டல் கருத்தரங்குகளை யாழ். பிராந்திய உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடத்தி வருகின்றது.

பருத்தித்துறை ஆகிய இடங்களில் நடைபெற்ற கருத்தரங்கில் வர்த்தகர்களும் மற்றும் மாணவர்கள், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் வாரங்களில் சுன்னாகம், மானிப்பாய் சாவகச்சேரி ஆகிய இடங்களில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது என உள்நாட்டு இறைவரித் திணைக்களப் பிரதி ஆணையாளர் பாலசுந்தரம் சிவாஜி தெரிவித்தார்.

குடாநாட்டில் இறுதிக் கருத்தரங்கு யாழ். நகரில் நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)

### குடாநாட்டில் கடந்த வருடம்

## பப்பாசிச் செய்கையால் நல்ல வருமானம்



யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 102 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பெரும்போக பப்பாசிச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலமாக ஆயிரத்து 215 மெற்றிக்தொன் பப்பாசி உற்பத்தி கிடைக்கப்பெற்றது என்று விவசாய திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

அதேநேரம் சிறுபோகத்தில் பப்பாசிச் செய்கையானது 118 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு ஆயிரத்து 140 மெற்றிக் தொன் உற்பத்தியை பெற்றுள்ளது.

பப்பாசிச் செய்கையாளர்கள் தமது உற்பத்திகளை அதிகளவு தென்பகுதிக்குச் சந்தைப்படுத்தினர்.

இதன் மூலம் உள்ளூர் வர்த்தகர்களும் இதன் மூலமாக பப்பாசி செய்கையாளர்கள் அதிக வருமானத்தை ஈட்டினார்கள். (ந-13)

## இளநீர் விற்பனை அமோகம்

### குளிர்பானத்தைத் தவிர்க்கின்றனர் மக்கள்

குடாநாட்டில் பரவலாக இளநீர் வியாபாரம் சூடுபிடித்துள்ளது. குளிர்பானத்துக்குப் பதிலாக அதிகமானோர் இளநீரை வாங்கிப் பருகுவதை அவதானிக்க முடிகிறது.



தற்போது குடாநாட்டில் சீரற்ற காலநிலை நிலவுகிறது. மழை, கடும் வெயில் என காலநிலை மக்களை வாட்டி வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கிக் கொண்டுள்ள சிலர் பல இடங்களிலும் இளநீர் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். வீதியால் செல்வோர் ஆவலுடன் இளநீரை வாங்கிப் பருகுகின்றனர்.

40 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட இளநீர் தற்போது 60 ரூபா, 70 ரூபா என [illegible] பருகுகின்றனர். (ஒ-14)




யாழ்ப்பாணம்,ஏப்.30

கல்லுண்டாய் நரசிங்க வைரவர் ஆலய திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 9 தினங்கள் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். (ந-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள், மடிக்கணினி

வடமராட்சி, ஏப்.30

வடமாகாண விவசாய உத்தியோகத்தர்களுக்கு ஆளுநர் அலுவலகத்தில் வைத்து மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்க செயற்பாடுகள் மற்றும் பயிற்சிகளை முன்னெடுக்க வசதியாக 5 மோட்டார் சைக்கிள்களை ஜீ.ரி. இசட் நிறுவனம் வழங்கியிருந்தது.

இவை திணைக்கள உத்தியோகத்தர்கள் கடமை மேற்கொள்ள வசதியாக அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இதேபோல உணவு மற்றும் விவசாய நிறுவனம் ஒரு மோட்டார் சைக்கிள்களையும், மடிக்கணினிகளையும் வழங்கியிருந்தது.

இந்த மோட்டார் சைக்கிள் யாழ். மாவட்ட விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கும் மடிக்கணினிகள் விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன. (ந-8)



வளர்மதி சனசமூக நிலையத்திலுறா பன சமூக முன்னெடுத்தல் குழுவின் நிறைவு விழாவில் 'கெயர்' நிறுவன திட்டப் பணிப்பாளர் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வின் பிரதம விருந்தினர் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் அருகில் நிற்பதையும் காணலாம். (ந)




# நிர்வாக சேவையிலுள்ளோர் உரியமுறையில் பணியாற்றினால் மக்களின் நன்மதிப்பைப் பெறலாம்

## சேவை நயப்பு விழாவில் வடமாகாண மேலதிக முன்னாள் கல்விப் பணிப்பாளர்

தென்மராட்சி, ஏப்.30

அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைய கடமையாற்ற வேண்டிய பணி ஒவ்வொரு பணியாளர்களுக்கும் உண்டு. அதிலும் நிர்வாக சேவையில் உள்ளவர்களின் பணிகள் மிகப்பொறுப்பு வாய்ந்ததாகும். தமக்கு வழங்கப்பட்ட பணியை உரிய முறையில் விசுவாசமாகவும், நேர்மையாகவும் செய்பவர்கள் மக்களினதும் சக ஊழியர்களினதும் அன்பையுப் மதிப்பினையும் பெறுகின்றனர். இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண மேலதிக முன்னாள் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம்.

சாவகச்சேரி நகரசபைச் செயலாளராகக் கடமையாற்றி ஒய்வுபெற்றுச் செல்லும் சு.புத்திரசிகாமணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மணிவிழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சேவையிலிருந்து ஓய்வு பெறும் நகரசபைச் செயலாளர் சு.புத்திரசிகாமணி தனது அரச சேவைக்காலத்தில் பல்வேறு பொறுப்புக்களை வகித்த போதிலும் அவரின் சேவைகள் பரிணமித்து நிற்பதை இன்றைய விழா எடுத்துக் காட்டுகிறது. இவர் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் பதவியிலிருந்து இளைப்பாறுகின்ற போதிலும் இன்றைய மணி விழாவில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்கள், வலிகாமம் மேற்கு, யாழ்.செயலகம், பிரதேச செயலர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் எனப் பல தரப்பினர் வருகை தந்துள்ளனர். அவரது மகத்தான பணிக்கு கிடைத்த பரிசு எனலாம்.

60 வயதில் ஓய்வு பெறும் திட்டம் பல சேவையாளர்களை எம் மத்தியிலிருந்து விடுவித்து விடுகிறது. தமது சேவைக்காலத்தில் மக்களின் மனதறிந்து அவர்களுக்குத் தேவையானவற்றை உடனடியாகச் செய்வது ஒவ்வொரு உத்தியோகத்தரின் தலையாய பணியாகும். அந்த வகையில் சிறந்த அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கும் உத்தியோகத்தர்கள் 60 வயதில் ஓய்வு பெறுவதால் அந்தப் பகுதி மக்களுக்கு கிடைக்கக்கூடிய பல சேவைகள் அவரின் பின்னர் கிடைத்தாலும் மக்களைக் கவரக் கூடிய வகையிலான உத்தியோகத்தர் கிடைப்பது குறைவு.

எப்போது 60 வயது வருமென எதிர்பார்த்திருக்கும் நிர்வாக அலுவலர்கள் எம் மத்தியில் அதிகளவில் உள்ளனர். அதிலும் நிர்வாக சேவைத் தரத்தில் உள்ளவர்கள் பற்றிச்சொல்லத் தேவையில்லை. அவர்களது தொலைபேசி எந்த நேரமும் அழைப்பினை எதிர்பார்த்துக் காத்திருக்கும். தற்போது நாட்டில் மாதம் முழுவதும் ஓய்வு ஒழிவின்றி இரவு பகலாகக் கடமையாற்றுவோர் நிர்வாக சேவை அதிகாரிகளே. (வ-9)

# உடற்பயிற்சிப் போட்டி

வடமராட்சி, ஏப்.30

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டியில் பங்கு பற்றும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் உரிய நேரத்தில் சமுகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் கேட்டுள்ளது. (ந-8)

# சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ்.கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் 2009/2011ஆம் ஆண்டில் பயிற்சிபெற்று வெளியேறிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-13)

# வீடுகளில் சாராயம் விற்ற மூவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ்.குருநகர் மற்றும் அரியாலைப் பிரதேசங்களில் சட்ட விரோதமாக அரச சாராயத்தை வீடுகளில் வைத்திருந்த இரு நபர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரச சாராயத்தை அனுமதியின்றி வீடுகளில் வைத்து விற்பனை செய்யும் நோக்குடன் பாவனைக்கு மிகுதியாக வீடுகளில் வைத்திருந்த இரு நபர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இருவரும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை- போயா தினத்தில் வீட்டில் வைத்து மதுபானம் விற்ற நபர் ஒருவரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தூர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஆவார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (ஓ-14-ரி)



வேலணை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களை ஒன்றுபடுத்துவது தொடர்பாக மகளிர் சங்க உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது... (ந-7)

# ஆண்டு விழாவும் மெய்வன்மைப் போட்டியும்

வடமராட்சி, ஏப்.30

தும்பளை கிழக்கு, சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சிறுமலர்கள் முன்பள்ளியின் 32 ஆவது மெய்வன்மைப் போட்டியும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி அதிபர் கா.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் கலந்துகொள்வார். (ந-8)

# மட்டுவிலில் திருட்டுகள் அதிகரிப்பு

தென்மராட்சி,ஏப்.30

மட்டுவில் வடக்கு, மட்டுவில் மத்தி, சந்திரபுரம் ஆகிய பகுதிகளில் தோட்டங்கள், குடியிருப்புகள் போன்ற இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் மின் மோட்டார்கள் இணைப்புகளுடன் திருடிச் செல்லும் சம்பவங்கள் அண்மைக் காலமாக இடம்பெற்றன.

இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் இந்து ஆலயங்கள் போன்ற இடங்களில் வைக்கப்பட்டிருந்த மின்.மோட்டார்களும் திருடர்களின் கைவரிசைக்குத் தப்பவில்லை.

இதேவேளை-சந்திரபுரம் பகுதி ஆலயமொன்றில் வைக்கப்பட்டிருந்த மணிகளும் அண்மையில் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இந்தக் கிராமங்களுக்கு அருகில் உள்ள கல்வயல் பகுதியில் 50 இற்கு மேற்பட்ட மின்மோட்டார்கள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# குடும்பப் பெண் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

தென்மராட்சி,ஏப்.30

காலை உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த குடும்பப் பெண் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நுணாவில் மேற்கில் இடம்பெற்றது. மயங்கிய நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கிய போது சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேயிடத்தைச் சேர்ந்த [illegible] தன் இராசலட்சுமி (வயது-54) என்பவரே உயிரிழந்தவராவார். (வ-9)

# ஜி.சீ.ஈ.பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின்

## அடைவு மட்டம் அதிகரிக்க விசேட செயற்றிட்டம்

வடமராட்சி, ஏப்.30

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிலிருந்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்க விசேட செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வடமராட்சி கல்வி வலயம் தீர்மானித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடையே குறிப்பிட்ட 5 பாடங்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கவென உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாட ஆசிரியர்கள் கொண்ட குழு ஒன்று இந்த விசேட செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும்.

விசேட செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் குழு பாடரீதியான கற்கை நெறிகளையும், மாதிரி வினாத்தாள்களையும் தயாரித்து மாணவர்களுக்கு வழங்கி மாணவர்கள் மேலதிகப் பயிற்சிகளைப் பெறவாய்ப்பு அளிக்கும். (ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிதாக முன்பள்ளி அமைப்பு

புதுக்குடியிருப்பு, ஏப்.30
ஆனந்தபுரம் ஆறாம் வட்டாரத்தில் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் முன் பள்ளி ஒன்று அமைக்கப்படவுள்ளது. இந்தப் பகுதியில் இயங்கி வந்த முன்பள்ளிக் கட்டடம் இறுதிப் போரில் முற்றாக சேதமடைந்துள்ளது. இந் நிலையில் முன்பள்ளி அலுவலகத்துக்கு உதவுமாறு யாழ்ப்பாண நகர் மைய றோட்டறிக்கழகத்திடம் கிராம மக்கள் கோரியிருந்தனர்.
கோரிக்கையை ஏற்றுக் கொண்ட றோட்டறிக் கழகம் நிதியுதவி வழங்கியுள்ளது. இதன் மூலம் அப்பகுதி மாதர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து முன்பள்ளியை புதிதாக அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. (ஜ-400)

வவுனியா தமிழ் பிரதேச சபையில்


## 60 வரையான உள்ளக வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில்

வவுனியா,ஏப். 30
வவுனியா தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட 60 க்கு மேற்பட்ட உள்ளக வீதிகள் இன்னமும் புனரமைக்கப்படாது உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் இந்த வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.
நெளுக்குளம் சிறுவர் பாடசாலை வீதி, முள்ளிபுலவு வீதி, தொழிநுட்ப கல்லூரிக்கு அருகில் உள்ள இரு வீதிகள், நேரியகுளம் பிரதான வீதியிலிருந்து பிரியும் 8 கிளை வீதிகள் மன்னார் வீதியில் குறுக்காகச் செல்லும் 12 வீதிகள், ஏ-9 வீதியில் குறுக்காகச் செல்லும் 14 வீதிகள் உட்பட 60க்கும் மேற்பட்ட வீதிகளே மிகவும் மோசமான நிலையில் உள்ளன.
இந்த வீதிகள் அண்மையில் பெய்த கடும் மழையினால் சேதமடைந்துள்ளன.
இந்த வீதிகளைப் பயன்படுத்தும் நோயாளிகள் கருத்து தெரிவிக்கையில்;
ஓமந்தை வைத்தியசாலை, பூவரசங்குள வைத்தியசாலை ,பம்பமடு ஆயுள்வேத வைத்தியசாலை, வவுனியா பொது வைத்தியசாலை, வவுனியா ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு தாம் சென்று திரும்ப முடியாதுள்ளது என்கின்றனர்.

**இந்த வீதிகள் அண்மையில் பெய்த கடும் மழையினால் சேதமடைந்துள்ளன.**


இந்த வீதிகளில் மழை காலங்களில் சிறியரக வாகனங்கள் கூட செல்ல முடியாது போகிறது. இதனால் தூர இடங்களுக்கு சென்று பயணத்தை தொடர வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ஜ-402)

## பாலியாற்றுப் பாலத்தினூடாக இலகுவான போக்குவரத்து



பாண்டியன்குளம்,ஏப்.30
துணுக்காய் மற்றும் பாண்டியன்குளம் பிரதேசங்களை இணைக்கும் பாலியாற்றுப் பாலத்தின் ஊடாக மக்கள் இலகுவான போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பாலியாற்றுப் பகுதி கடந்த காலங்களில் மக்களால் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வந்தது. மக்கள் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் மழை காலத்தில் இந்தப் பகுதியில் போக்குவரத்தை மேற்கொண்டனர். மக்களின் இன்னல்களை அறிந்த முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினரும், வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தினரும் இணைந்து இந்தப் பாலத்தைத் துரிதமாக அமைத்து வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-415)

# கிளிநொச்சி நகரில் மீண்டும் அமைகிறது தண்ணீர் தாங்கி




கிளிநொச்சி,ஏப்.30
கிளிநொச்சி நகர்பகுதி மற்றும் சுற்றியல் கிராம மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மீண்டும் குடிதண்ணீர்த் தாங்கியை அமைப்பதற்கு ஜப்பானின் 'ஜெயக்கா' நிறுவனம் முன்வந்துள்ளதாக தேசிய நீர்வழங்கல், வடிகால் அமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் பி.தபீத்திரகுமார் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
கிளிநொச்சி நகர்ப்பகுதியின் குடிதண்ணீர்த் தேவைக்காக அமைக்கப்பட்ட தாங்கிகள் போர்க் காலத்தில் தகர்க்கப்பட்டன.
2002 சமாதான காலத்தில் புதிதாகக் கட்டப்பட்ட தாங்கியும் இறுதிப் போரின் போது தகர்க்கப்பட்டதனால் கிளிநொச்சி நகர மற்றும் சுற்றியல் கிராம மக்களது குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதில் பல்வறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது.
இந்த நிலையில் எமது சபையுடன் இணைந்து 'ஜெய்க்கா' நிறுவனம் 982 மில்லியன் ரூபா செலவில் புதிய நீர்த் தாங்கியை அமைக்க முன் வந்துள்ளது.
இவ்வாறு அமையும் நீர்த் தாங்கி 3 ஆயிரம் கனமீற்றர் கொள்ளளவைக் கொண்டது. இதன் மூலம் 14 கிராமங்களில் உள்ள 30 ஆயிரம் பேருக்கு குடிதண்ணீரை வழங்க முடியும்.
குறிப்பாக விவேகானந்த நகர், உதயநகர் கிழக்கு, ஆனந்தபுரம், தொண்டமா நகர்., கனகாம்பிகைக்குளம், இரத்திணபுரம், கிளிநொச்சி நகர் மருத நகர், கனகபுரம், திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு ஆகிய பிரிவுகளுக்கு குடிதண்ணீர் விநியோகிக்க முடியும்.
தற்போது நிரந்தர நீர்த்தாங்க இல்லாத நிலையில் தற்காலிகமான செயற்றிட்ம் ஊடாக நடமாடும் சேவைகள் இடம் பெற்று வருகின்றன- என்றார். (ஜ-13)

## கணித,விஞ்ஞான பாடங்களுக்கு நிரந்தர ஆசிரியர்கள் இல்லை

**சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தில்**

மாங்குளம்,ஏப்.30
வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தில் சுமார் 8 வருடத்துக்கு மேலாக விஞ்-ஞான பாட ஆசிரியர் இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.
இதனால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிப்படைவதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளர்.
முக்கிய பாடங்களில் ஒன்றாக விஞ்ஞான பாடம் காணப்படுகிறது. ஆனால் இந்தப் பாடசாலையில் அதற்கு நிரந்தை ஆசிரியர் இல்லை. கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் முதல் கணித பாட ஆசிரியருக்கு இடமாற்றம் பெற்றுக் சென்றுள்ளனர். இந்த நிலையிவ் கணித பாடத்துக்கும் ஆசிரியர் இல்லை.
ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் இருவரும் இடைநிலைப் பிரிவுக்கு 6 ஆசிரியர்களும் உள்ளனர்.
தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை உள்ள இந்தப் பாடசாலைக்கு பொருத்தமான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாததால் இருக்கும் சிலரே எல்லாப் பாடங்களையும் கற்பிக்க வேண்டியுள்ளது. இதனால் எமது பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் இல்லை என்று கவலை தெரிவிக்கன்றனர் பெற்றோர்.
எனவே எமது கல்வி வலயத்தினூடாக பின்தங்கிய பாடசாலை மக்களிற்கு ஆசிரிய வெற்றிடங்களை விரூபிப்பதற்குத் தருமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஜ-422)

## அமெரிக்க அதிகாரி மன்னாரில்



மன்னார்,ஏப்.30
வன்னி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராயவென மன்னாருக்கு சென்ற அமெரிக்க அரசின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய வெளிவிவகாரங்களுக்கான அலுவலர் லெஸ்லி ரேய்லர் அங்கு அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
கடந்த வியாழக்கிழமை மன்னாருக்குச் சென்ற அவர் மன்னார் மறைமாவட்ட ஆண்டகை இராயப்பு ஜோசப்பு ஆண்டகை, மீனவ சங்கப் பிரதிநிதிகள் மற்றுத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

**அலுவலர் லெஸ்லி ரேய்லர் அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.**

இறுதியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோதராதலிங்கத்தையும் சந்தித்தார். (ஜ-12)

## வவுனியா தெற்கு கல்வி வலயம் ஜீ.சீ.ஈ. சா/தரத்தில் முன்னேற்றம்

**கல்வி அபிவிருத்தி அதிகாரி தகவல்**

வவுனியா,ஏப்.30
வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட மாணவர்கள் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 10 வீத அதிகளவு சித்திகளைப் பெற்றுள்ளதாக வவுனியா தெற்கு வலயக்கல்வி அபிவிருத்தி அதிகாரி சின்னையா தெரிவித்தார்.
இது குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்;
2011 ஆம் ஆண்டு 58 வீத மாணவர்கள் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர். 2012 இல் 10 வீதம் அதிகரித்து 68 வீத மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதன்மூலம் வவுனியா தெற்கு கல்வி வலய பாடசாலைகளுக்கு மாணவர்கள் பெருமை சேர்த்துள்ளனர்.
இறம்பைக்குளம் மகளிர் பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 91 வீதமான மாணவர் சித்தியடைந்துள்ளனர். சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவர்கள் 91 வீதம் சித்தியடைந்துள்ளனர். தமிழ் மகா வித்தியாலயத்தில் 87 வீதமான சித்தியையும், விபுலானந்தாக் கல்லூரியில் 85 வீதமான சித்தியும் பெற்றுள்ளனர். வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் 2011 ஆம் ஆண்டு பெறுபேற்றை விட 2012 ஆம் ஆண்டு பெறு பேற்றில்அதிகளவான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.
வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 2013 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் 1,432 மாணவர்கள் சித்தியடைந்து உயர் தரப் பிரிவுக்கு கல்வி கற்கும்தகுதியைப் பெற்றுள்ளனர்- என்றார். (ஜ-402)

## கிளி.நகரில் கழிவகற்றல் சீரில்லை



கிளிநொச்சி,ஏப்.30
கிளிநொச்சிப் பிரதேச சபையினர், நகரப் பகுதியில் சேரும் கழிவுகளைச் சீராக அகற்றுவதில்லை என குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.
இதனால் நகரின் பல பகுதிகளிலும் கழிவுகள் தேங்கி சூழல் மாசுபடும் வகையில் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
தற்போது மழை பெய்வதால் கழிவுகள் தேங்கியுள்ள இடங்களில் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஜ-6)

## சிறிய குளங்கள் புனரமைப்பு

அக்கராயன்,ஏப்.30
ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் சிறிய குளங்கள், நெற்களஞ்சியங்கள் மற்றும் [illegible] போர்க் காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் பராமரிக்கப்படாது சேதமடைந்த குளங்கள், கட்டடங்கள், வாய்க் கால்கள் ஏற்கனவே திருத்தி அமைக்கப்படவுள்ளன.
இதன் மூலம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், வெள்ள நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் வசதிகள் கிடைக்கும் என நம்பப்படுகிறது.
அத்துடன் நெற்களஞ்சியங்கள் மூலம் நெல்லை சேமித்து வைக்கவும் வசதியாக அமையும் என விவசாயிகள் தெரிவிக்கின்றன. (ஜ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகம்

ஓர் ஊரில் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு மருமகள். மொத்தம் அந்தக் குடும்பத்தில் 4 பேர்.

அவர்கள் மிகவும் ஏழைகள். சாப்பாட்டுக்கே கஷ்டம்.. இருந்தாலும் பெரிய மனசு. முடிஞ்ச அளவுக்கு அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைக்கிறவர்கள்.

அந்த ஊரிலே ஒரு சமயம் திடீரென கடுமையான பஞ்சம். ஏதோ கிடைத்ததைச் சாப்பிட்டு வாழ்ந்துவந்தனர்.

ஒரு சமயம் தொடர்ந்து மூன்று நாள் பட்டினி.

அந்த ஆள் எங்கேயோ போனார். சிறிதளவு தினை மா கிடைத்தது. அதனைக் கொண்டு வந்தார்.

வீட்டில் இருப்பவர்கள் நான்குபேர். அதனால் அதை நான்கு பாகமாக பிரித்துக்கொண்டார்கள். சாப்பிட உட்கார்ந்தார்கள். அந்த நேரம் பார்த்து அங்கே பசியோடு ஒருவன் வந்தான். அவன் முகத்தைப் பார்த்ததுமே இவர் நிலைமையைப் புரிந்து கொண்டார். 'வாப்பா வந்து உட்கார்'- என்றார்.

தன்னுடைய பங்கு தினை மாவை எடுத்து அவனிடம் கொடுத்து "சாப்பிடு!"-என்றார்.

அவனும் ஆவலோடு வாங்கி அதைச்சாப்பிட்டான்.

அதன்பிறகும் அவனுடைய பசி தீரவில்லை!

இவருக்கு அது புரிந்தது. என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை.

இந்த சமயத்திலே அவருடைய மனைவியும், தன்னுடைய பங்கு தினை மாவை எடுத்து அந்த ஆளிடம் கொடுத்தாள்.

இப்ப அவர் நினைத்தார்.

"நான் இந்தக் குடும்பத்தின் தலைவன். அடுத்தவர்களுக்கு உணவு அளிக்க வேண்டியது என் கடமை! ஆனால் என்னாலே என் மனைவியும் பசி பொறுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதே" என நினைத்துக் கவலைப்பட்டார்.

மனைவி கொடுத்த பங்கும் முடிந்தது.

அப்படியும் அந்த ஏழையின் பசி தீரவில்லை.

அடுத்தபடியாக அவருடைய மகன் பார்த்தான். தன்னுடைய பங்கையும் எடுத்து அந்த ஆளிடம் கொடுத்தான்.

'இளம் வயது மகன் பசி பொறுக்க மாட்டானே' என முதலிலே நினைத்தார். இருந்தாலும் விருந்தாளிக்கு உதவ வேண்டிய கடமையை நினைத்து பேசாமல் இருந்துவிட்டார்.

மகன் கொடுத்த பங்கும் முடிந்தது.

அப்படியும் அந்த ஆள் பசி தீரவில்லை.

மருமகள் பார்த்தாள். அவளும் தன்னுடைய பங்கை எடுத்துக் கொடுத்தாள்.

"அம்மா! நாங்கள் தான் உங்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள். புகுந்த வீட்டிலே உன்னை என் மகள் மாதிரி வளர்க்கிறேன். எங்களாலே நீ இப்படி வாடலாமா? அது அதர்மம் -என்றார்.

"ஐயா! என்றைக்கு நான் உங்கள் மகனை திருமணம் செய்தேனோ, அன்றைக்கே நான் உங்கள் குடும்பத்திலே ஒருத்தியாகிவிட்டேன். உங்களுடைய சுக துக்கங்களிலே எனக்கும் பங்குண்டு! நான் மனசார என் பங்கைக் கொடுக்கிறேன். இதை வாங்கி அந்த விருந்தாளிக்குக் கொடுங்கள்! என்று சொன்னாள்.

அதை வாங்கிக் கொடுத்தார். அவருடைய பசியும் தீர்ந்தது.

உடனே அவர் மறைந்துவிட்டாராம். அந்த இடத்திலே யமதர்மன் நின்றுகொண்டிருந்தானாம்.

"இதோ பாரப்பா- உன்னை சோதிப்பதற்காகத்தான் இப்படி வந்தேன். பொருள் படைத்தவன் தர்மம் செய்வதிலே அதிசயம் இல்லை. ஆனால் பட்டினி கிடக்கிறவன் தர்மம் செய்வது பெரிய விடயம். பட்டினி கிடக்கும் ஒருவன் தன் கையிலே உள்ள உணவைத் தானமாகக் கொடுக்கிறது இருக்கே அது தியாகத் திலேயே பெரிய தியாகம்.

உங்கள் எல்லோரையும் நான் பாராட்டி ஆசீர்வதிக்கின்றேன். சுவர்க்க லோகம் உங்களுக்காகக் காத்திருக்கும்-என்று சொல்லி விட்டு யமதர்மன் மறைந்தான்.

அந்த இடத்துக்கு ஒரு கீரிப்பிள்ளை வந்ததாம். கீழே சிந்திய தினை மாவை ருசி பார்த்ததாம். கீழே விழுந்து அதிலே புரண்டதாம். அந்த மா உடம்பிலே பட்ட இடம் எல்லாம் பொன்மயமாக ஆகியதாம்.

தியாகத்தின் பெருமையைப் புரிந்து கொள்வதற்காகச் சொல்லப்பட்ட கதை இது.

அந்த மாதிரி தியாகமெல்லாம் இந்தக் காலத்தில் யாரும் செய்வதில்லை.

இருக்கிறவன் செய்யும் தர்மத்தை விட இல்லாதவன் செய்யும் தர்மமே பெரிது.

இந்தக்காலக் குடும்பத் தலைவர் ஒருவர் சொன்னார்.

"எங்கள் வீட்டுக்கு யார் வந்தாலும் முதலிலே என் பங்கு சாப்பாட்டை அவரிடம் கொடுத்துவிடுவேன் என்றார்.

'அப்படியா' என்றேன்.

'ஆமாம்.. அதன்பின்னர் ஹோட்டலுக்குப் போய் வாய்க்கு ருசியாக நல்ல சாப்பாடா நான் சாப்பிடுவேன்" என்றார்



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கிளுவை மரத்தில் தோன்றிய மயிலைப்புலம் ஐயனார் ஆலயம்



லக்ஸ்மன்

சரவணை மயிலைப்புலம் மக்கள் தமது கால்நடைகளான ஆடு, மாடுகளைக் கடல் கடந்து புல் நிலங்களில் மேய்ச்சலுக்கு விடுவது வழமை. அந்தக்காலத்தில் நாய்களின் தொல்லைகள் அதிகமாகக் காணப்பட்டதால் தமது மந்தைகளை மேயவிட்ட பகுதிகளுக்கு அடிக்கடி சென்று பார்வையிட்டு வருவதுண்டு. அப்படி அங்கு சென்று வந்த மக்களுக்கு நொச்சிக் காட்டின் நடுப்பகுதியில் இருந்த கிளுவை மரம் ஒன்று தென்பட்டது.

அந்த மரத்தின் அண்மையில் செப்பனிடப்பட்ட கல் ஒன்றில் கற்பூரம் கொழுத்திய அடையாளம் தெரிந்ததுடன் சிறு மண் சட்டியில் வேப்பெண்ணை மணம் வீசியபடி எரிந்த திரி ஒன்றும் காணப்பட்டது. என்னவோ இது என்று ஆச்சரியப்பட்ட அவர்கள் இரவு நேரங்களில் வெள்ளை உடை தரித்த உரு வெளித்தோற்றம் தெரிவதையும் இந்த மரத்தைச் சுற்றி பிரகாசமான ஒளிப் பிளம்பு தெரிவதையும் பார்த்து திகைப்படைந்ததுடன் மந்திர உச்சாடன ஒலிகள் கேட்பதையும் அவதானித்துள்ளனர்.

இந்தச் சம்பவங்களால் இந்தக் கிளுவை மரத்தடியில் தெய்வம் இருப்பதாக உணர்ந்து கொண்டதுடன் ஊரவர்கள் ஒருங்கிணைந்து குறிப்பிட்ட இடத்தில் கூடி தாங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் ஒருவருக் கொருவர் பரிமாறி அற்புதம் நிகழும் ஓர் இடமாக வியந்து கொண்டனர்.

உருவேறிய ஒரு மூதாட்டி அருள் வரம் பெற்றவளாய் அரிகர புத்திர ராகிய ஐயனார்தான் இங்கே உள்ளதாகவும் எங்களையும் எமது மந்தைகளையும் பாதுகாத்து வரும் தெய்வம் அவரே எனவும் நாம் அவரை ஆதரிக்க வேண்டும். பொங்கலிட்டுப் படையல் செய்ய வேண்டும் எனக்கூறி ஆவேசமாகக் கத்தி விழுந்ததாகவும் இந்தச் சம்பவங்கள் கிராமத்து மக்களிடையே ஒரு பயத்தையும் அதேசமயம் இறை பக்தியையும் தோற்றுவித்ததாகவும் சொல்லப்படுகின்றது.

வேலணை வடக்கின் மேற்கு எல்லையாக சரவணை கிழக்கில் இருக்கும் இந்தக் கோயில் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நாவல், வேம்பு, இலுப்பை, புளி போன்ற பெரிய விருட்சங்களும் இலந்தை, நொச்சி, காரை, காண்டைப் புதர்களும் நிறைந்த காடாகவும் இருந்துள்ளது. மக்கள் தமது பக்தி மேலீட்டால் இந்தப் பகுதிகளைத் துப்புரவு செய்ததுடன் சிறிய ஆலயத்தைத் தோற்றுவித்து இயன்ற காணிக்கைகளை வழங்கி பொழுது புலரும் நேரங்களில் பொங்கல் செய்து படைத்தனர். ஆனி அமாவாசைக்கு முந்தைய சதுர்த்தி நாளாகும். இன்றும் அதே தினத்தில் இந்தக் கோயிலின் பொங்கல் நாள் என்பர்.

> வேலணை வடக்கின் மேற்கு எல்லையாக சரவணை கிழக்கில் இருக்கும் இந்தக் கோயில் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நாவல், வேம்பு, இலுப்பை, புளி போன்ற பெரிய விருட்சங்களும் இலந்தை, நொச்சி, காரை, காண்டைப் புதர்களும் நிறைந்த காடாக இருந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் இடம் பெறுவதுடன் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் விளக்கேற்றி கிளுவை விருட்சத்தை வழிபட்ட மக்கள் கிளுவை மரத்தில் ஆல் ஒன்று முளைத்தெழுவதைக் கண்டு ஆச்சரியமடைந்ததாகவும் கிளுவையில் வளர்ந்த ஆல் நன்கு கிளை பரப்பி நன்கு வளர்ந்து கிளுவையும் மூடி விழுதுகள் பரப்பியிருந்தது எனவும் முன்னோர்கள் கூறுவதுண்டு.

அயல் பகுதிகளில் வேறு ஒரு ஆலயமும் இல்லாத நிலையில் தனியே ஆலமரத்து ஐயனாராக அயலில் உள்ள மக்களுக்கு அருளாட்சி வழங்கி இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக காவல் தெய்வமாக இருந்துள்ள ஐயனாருக்கு கற்கோயில் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாக நன்னியார் சுப்பிரமணியம் என்பவர் அதற்கான திருப்பணிகளை மேற்கொண்டார். இவரது காலம் 1850 எனச் சொல்லப்படுகின்றது. இவரால் ஆரம்பிக்கப்பட்ட இத்திருப்பணி இவரது மகனான சோதிடர் வேலுப்பிள்ளை என்பவரால் ஓரளவு நிறைவு செய்யப்பட்டது.

மூன்று மண்டபங்கள் கொண்ட மடாலயமாக அதனை நிர்மாணித்திருந்தார். கோயிலின் உள்ளே கருவறையில் ஐயனார் கொலுவிருக்கும் பீட வடிவிலான லிங்கம் வைத்து பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

கோயில் அமைத்த போதும் ஆலமரத்திலேயே ஐயனார் அருவுருவாகி இருக்கின்றார் என்ற நம்பிக்கை இன்னமும் மக்களிடத்தில் இருக்கிறது. வைசூரி, வயிற்றோட்டம் போன்ற நோய்களுக்கு உள்ளானவர்கள் ஐயனாரை வழிபட்டு ஆலமரத்தின் கீழ் படுத்து நோய் மாறிச்சென்ற சம்பவங்கள் அந்தக்காலத்தில் நிறையவே இருந்துள்ளன என்கிறார்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
புதிய சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

[illegible] 'சதா போன்ஸ்' - மாறுசந்தி, அல்வாய்: 021 226 3206, நெல்லியடி [illegible] பஸ் நிலையம், நெல்லியடி: 021 490 1519, ஜோதி [illegible]: 0232222052 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு: 021 227 1499, 'மன்னார் சிசாந்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478, 'கொடிகாமம் [illegible]' பஸ் நிலையம், கொடிகாமம்: 0774937585, 'கோபி வலைக்கிற்றி' [illegible]: 0779598917, 'அன்பரசன்' சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான்: 0775036571.

# ஏமாற்றுக் கனவுகள்

திட்டம் போட்டு திருடுபவர்கள் இன்னமும் நாட்டில் பெருகிக் கொண்டே தான் இருக்கிறார்கள். அவர்களிடம் ஏமாந்தே தீருவோம் என்று ஒற்றைக்காலில் பெருந்தொகையானோர் நிற்பது ஏமாற்றுபவர்களுக்கு வசதியாகப் போய்விடுகிறது.

இப்போதெல்லாம் ஏமாற்றுவதற்கு நிறைய வழிகள் உண்டு. ''ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துப் போகிறேன்'', ''அரச வேலை வாங்கித் தருகிறேன்'' என்றெல்லாம் நம்பக் கூடிய பொய்களை சொல்லியே ஏமாறக் காத்திருப்போரிடம் பெருந்தொகையான பணத்தை கறந்துவிடுகிறார்கள். பணத்தைக் கொடுத்தவர்கள் கங்காரு தேசத்தில் கால்வைப்பது போலவோ அல்லது வரை கட்டி மற்றவர்கள் சல்யூட் அடித்து நிற்க சுழல் கதிரையில் அமர்ந்தபடி உயர் உத்தியோகம் பார்ப்பது போலவும் கனவு கண்டுகொண்டிருக்க கருட்டிய காசுடன் கனவுகளை விதைத்தவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோய்விடுகிறார்கள்.

இப்படிப்பட்ட ஏமாற்றுப்பேர் வழியொருவர் மூன்று வருடங்களுக்கு முன்னர் ''நான் ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரிகிறேன்'' என்ற அறிமுகத்துடன் பல பேரிடம் சென்று வங்கிகளில் வேலை வாங்கித் தருவதாக ஆசையூட்டியிருக்கிறார். ஆனாலும் கரும்பு தின்னுவதற்கு கைக்கூலியும் கேட்டிருக்கிறார். லட்ச லட்சமாய் சம்பாதிக்கக் கூடிய வங்கித் தொழில் கிடைப்பதென்றால் சும்மாவா? நான்கைந்து லட்சங்களை அவரிடம் கொடுத்துவிட்டு உத்தியோகத்துக்கான நியமனக் கடிதம் வரும் என்று அவர்களும் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தார்கள். பார்த்துப் பார்த்து கண்கள் பூத்ததுதான் மிச்சம். நியமனக் கடிதம் வரவில்லை. மாறாக லட்சங்களை கடனாகக் கொடுத்தவர்கள்தான் நிதமும் வந்து மிரட்டிவிட்டுப் போனார்கள். கடைசியில் தாங்கள் இலவு காத்த கிளிகளாக உண்மை புரிந்ததும் பொலிஸிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்டார்கள். பொலிஸாரும் வழமைபோலவே 'துரித கதியில்' விசாரணை நடத்தியும் ஏமாற்றுப் பேர்வழி பிடிபடவில்லை.

காலம் எல்லாவற்றையும் மறக்கடிக்கச் செய்துவிடும் என்ற நம்பிக்கை மோசடிக்காரனுக்கு இருந்திருக்க வேண்டும். கிட்டத்தட்ட மூன்று வருடங்களின் பின்னர் ஊருக்கு வந்தபோது பாதிக்கப்பட்டவர்கள் இனங்கண்டபடி மோசடிப் பேர்வழி இப்போது சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் அடைக்கப்பட்டிருக்கிறார். ஆயினும் பணத்தைப் பறிகொடுத்தவர்களுக்கு அவர்களது பணம் திரும்பக் கிடைப்பது பற்றியோ எந்த உத்தரவாதங்களும் கிடைக்கவில்லை. ஒரு மோசடிக்காரனை பிடித்துக் கொடுத்த திருப்தி மட்டுமே அவர்களுக்கு. வருடக் கணக்கில் இழுபடும் வழக்கின் முடிவில்தான் அவர்களுக்கான நீதி கிடைக்கும்.

இது ஒரு பானையிலிருந்த ஒரு சோற்றின் பதம்தான். இதுபோலவே நிறையப்பேர் வெள்ளையும் சொள்ளையுமாக உங்கள் தலைகளில் மிளகாய் அரைக்க அணிவகுத்து வந்துகொண்டிருக்கிறார்கள். ஏமாறுவதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க வேண்டியவர்கள் நீங்கள்தான்.

# கொமன்வெல்த் மாநாடு இங்குதான் நடக்கும்

## மாற்றமில்லை என்கிறார் செயலாளர் நாயகம்

**சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து**
**கோகுலன்**

மின்சாரக் கட்டண உயர்வு தவிர்க்கப்பட மாட்டாதது என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் ஊடகத் தலைவர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் கூட்டமொன்றில் விளக்கினார். மின்சாரக் கட்டண உயர்வு மீள் ஆய்வு செய்யப்படாவிட்டால் அது நாட்டின் பொருளாதாரத்தின் மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றார் ஜனாதிபதி. இந்தக் கருத்துக்கு மேலும் விளக்கமளித்துள்ள பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, தனியார் மின்சார வழங்குநர் நிறுவனங்கள் மிக உயர்ந்த விலையில் மின்சார சபைக்கு மின்சாரத்தை வழங்குகின்றன என்றார் அமைச்சர். இவைகளில் இருந்து மின்சார சபையில் நிலைமைகள் நன்றாக இல்லை என்பது தெரிய வருகின்றது.

நுகர்வோர்களின் கட்டணம் பற்றி ஆலோசிக்கும் முன்பே அந்த உள் விவகாரங்கள் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இவை இவ்வாறு இருக்க, அரசின் பெரும் கவனம் கடந்த வாரம் பெரும்பாலும் லண்டன் பக்கமே திரும்பியிருந்தது. இந்த வருடம் நவம்பரில் கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடைபெறவிருப்பதையொட்டி லண்டனில் அந்த நிறுவன உறுப்பு நாடுகளின் அமைச்சர்களின் பணிக்குழுவினர் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டம் இடம்பெறுவதற்கு முன்பாக இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவுடன் ஆலோசனை நடத்தினார்.

நவம்பர் மாதம் இலங்கையில் உச்சி மாநாடு நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவது பற்றி அவர் செயலாளர் நாயகத்துக்கு எடுத்துக் கூறியுள்ளார். மாநாட்டை யொட்டி நடத்தப்படவிருக்கும் வேறு மூன்று மாநாடுகள் தொடர்பாகவும் பீரிஸ் அவரிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

லண்டன் மல்பரோ இல்லத்தில் இடம்பெற்ற அமைச்சர்கள் பணிக்குழு மாநாட்டின் முறையான நிகழ்ச்சி நிரலில் பிஜி தீவுகள் பற்றிய விவகாரமே முக்கியமாக இடம்பெற்றிருந்தது. அந்த நாட்டின் இராணுவத் தலைவர் 2006 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் பதவியைக் கைப்பற்றிய பின் அந்த நாடு கொமன்வெல்த் அமைப்பில் இருந்து நீக்கி வைக்கப்பட்டிருந்தது.

தேர்தல்களை நடத்தாமை, ஜனநாயகத்தை மீளவும் நிலைநிறுத்தாமை அந்த நாட்டின் மீதான குற்றச்சாட்டுக்களாக இருந்தன. பிஜி தீவுகள் மீளவும் முழு அளவில் அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதானால் அரசமைப்பு ரீதியில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும். சட்ட ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் கொமன்வெல்த்தின் அடிப்படை அரசியல் விழுமியங்களுக்கு அமைவாக இவை நிலைநாட்டப்பட வேண்டும் என்று கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தினார்கள். இவைகளுடன் [illegible]
[illegible]
பட்டிருந்தன. இந்தத் தலைப்பிலேயே இலங்கை தொடர்பான விடயம் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அமைச்சர்கள் பணிக்குழு விவாதங்களின் முழு விவரமும் உடனடியாக கிடைக்காவிட்டாலும் ஒரு தரப்பிலிருந்து கிடைத்துள்ள தகவலின்படி கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான அமைச்சர்கள் உச்சி மாநாடு நடைபெறவிருக்கும் இடத்தை மாற்றுவதற்கான ஆணை அமைச்சர்கள் பணிக்குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லையென்று அபிப்பிராயம் தெரிவித்ததாக அறிய முடிந்தது. அது கொமன்வெல்த் தலைவர்கள் எடுக்க வேண்டிய முடிவு என்று கருதப்பட்டமையால் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் பிஜி பற்றிய விவரம் மட்டுமே இடம்பெற்றிருந்தது.


அந்த அறிக்கையின் படி மாநாட்டுக்கு வங்காள தேச வெளியுறவு அமைச்சர் டிபு மொனி தலைமை வகித்தார். ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பொப்கார், கனேடிய வெளியுறவு அமைச்சர் ஜோன் பெயார்ட் மற்றும் ஜமேய்க்கா, மாலைதீவுகள், சியாரா லியோன், தன்சானியா, ட்ரினிடாட் மற்றும் வனுவாட்டு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

கொமன்வெல்த்தின் மைய விழுமியங்களையும், கொள்கைகளையும் உள்ளடக்கிய சாசனத்தை கொமன்வெல்த் தலைவர்கள் அங்கீகரித்தமையையும் அதன் தலைவரான பிரிட்டிஷ் மகாராணி அதில் கையெழுத்திட்டமையையும் அமைச்சர்கள் பணிக்குழு வரவேற்றுள்ளது. கொமன்வெல்த் சாசனமானது உள்ளடக்கியுள்ள பல விடயங்களுடன் ஜனநாயகம், மனித உரிமைகள், சட்ட ஆட்சி, அதிகாரப் பரவல், கருத்து வெளியிடும் சுதந்திரம், நல் ஆட்சி முறை, சகிப்புத் தன்மை, மதிப்பு மற்றும் புரிந்து கொள்ளல் மற்றும் சிவில் சமூகத்தின் பங்களிப்பு ஆகியவற்றுக்கு தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொண்டிருப்பதை பணிக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. கொமன்வெல்த்தின் அடிப்படை அரசியல் விழுமியங்களின் காவலன் என்ற முறையில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த குறிக் கோள்களை முன்னேற்றுவதற்கு தொடர்ந்து உழைப்பதென பணிக்குழு உறுதி செய்து கொண்டது.

பணிக்குழுவில் இலங்கை விடயம் விவாதிக்கப்படவில்லையென்று தெரிவிக்கப்பட்ட போதிலும் அதற்கு மாறாக சியாரா லியோன், ரொபாகோ போன்ற நாடுகளின் ஆதரவுடன் கனடா இலங்கையில் நடந்துள்ள சம்பவங்கள் தொடர்பாக எதிர்ப்பு தெரிவித்ததாக லண்டனிலுள்ள சில ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது பின்னர் செய்தியாளர்களுடன் பேசியபோது வங்காளதேச வெளியுறவு அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்டது. மாநாட்டுக்கு வெளியில் இந்த நாடுகளின் முயற்சிக்கு பிரிட்டன் உட்பட பல நாடுகள் ஆதரவளித்துள்ளன. அத்துடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு, சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற நிறுவனங்களும் ஆதரவு வழங்கியுள்ளன.

வெள்ளிக்கிழமை நடந்த கொமன்வெல்த் அமைச்சர்கள் பணிக்குழுவின் விவாதங்களின்படி கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாடு இலங்கையில் நடத்தப்படவிருப்பதற்கு இடையூறு எதுவும் இருக்கப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரிந்த போதிலும், இந்தக் குழுவின் இன்னொரு கூட்டம் வரும் செப்டெம்பரில் தொடங்கவிருப்பதை விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அறிக்கையின் மூன்றாவது பகுதியில் சில பிரிவுகள் அதற்கு அப்போது பொருத்தமாக அமையும் என்பது அவர்களின் வாதம். சனல்-4 தொலைக்காட்சியைச் சேர்ந்த ஜொனதன் மில்லர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு கொமன்வெல்த் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா பதிலளித்த போது பின்வருமாறு தெரிவித்தார்.

கொமன்வெல்த் தலைவர்கள் மாநாடு தொடர்பாக தீர்மானம் எடுப்பதில் கொமன்வெல்த் அமைச்சர்கள் பணிக்குழுவுக்கு எந்தவித தொடர்பும் கிடையாது. மாநாடு நடைபெறுவதற்கான இடம் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு அதை அவர்கள் விவாதித்தார்கள். 2009 ஆம் ஆண்டு சம்மதம் தெரிவித்தார்கள். 2011 ஆம் ஆண்டு அது இலங்கையில் நடைபெறும் என்று உறுதி செய்தார்கள். அது கொழும்பில் நடைபெற வேண்டும் என்பது ஒரு கூட்டுத் தீர்மானம். அதற்கான திகதி நவம்பர் மாதமாகும். எமக்கு மிகவும் அருமையான கொமன்வெல்த் விழுமியங்களைக் கடைப்பிடிப்பது தொடர்பாக நானும் இலங்கை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வருகிறேன். அவை கொமன்வெல்த் விழுமியங்கள் மட்டுமல்ல, அவர்களுக்கும் உரியவை என்றார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

## வைத்தியசாலையில் காலாண்டு புள்ளி விவரங்கள் தகவல்

அளவெட்டி, ஏப்.30

கடந்த மூன்று மாத காலப் பகுதியில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவிலும் விடுதியில் தங்கியும் கிளினிக்குகளிலும் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலையில் அறிக்கைகள் மூலம் தெரிய வருகிறது.

இதன்படி கடந்த மூன்று மாத காலத்தில் வெளிநோயாளர் பிரிவில் 24 ஆயிரத்து 503 பேரும், உள்ளக விடுதியில் தங்கி 2 ஆயிரத்து 712 பேரும் சகல கிளினிக்குகளிலும் 9 ஆயிரத்து 175 பேர் வரையிலும் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

இதன்படி காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் 2 ஆயிரத்து 619 பேர் வரையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

மூன்று மாதத்தில் 507 பேர் நாய்க்கடிக்கு உள்ளாகிய நிலையில் 397 பேர் விசர்நாய்க் கடித் தடுப்பூசி ஏற்றியுள்ளனர்.

உண்ணிக் காய்ச்சலால் 52 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் கடந்த மாதம் மட்டும் 22 பேர் இந்த நோய்க்காக சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த நோய் பெரும்பாலும் தன் சுகாதாரம் கவனிக்கப்படாமையாலேயே ஏற்படுகிறது.

பெரும்பாலும் வலி. வடக்கு மீள் குடியமர்வு இடம்பெற்ற பகுதிகளில் வாழும் மக்களே அதிகம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளமை வைத்தியசாலை மூலம் தெரிய வருகிறது.

**2013 முதல் காலாண்டில் சிகிச்சை பெற்றோர் தொகை**

- ★ வெளிநோயாளர் பிரிவில் 24, 503 பேர்
- ★ உள்ளக விடுதிகளில் 2, 712 பேர்
- ★ காய்ச்சல் 2, 619 பேர்
- ★ கிளினுக்குகள் 9, 175 பேர்
- ★ நாய்க்கடி 507 பேர்
- ★ உண்ணிக்காய்ச்சல் 52 பேர்
- ★ பற்சிகிச்கை 2, 030 பேர்
- ★ விபத்துகள் 431 பேர்

விபத்துக்களால் ஏற்பட்ட பாதிப்புகளால் சிகிச்சை பெற்றோர் 431 பேர். பற்சிகிச்சைப் பிரிவிலும் 2 ஆயிரத்து 30 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இங்கு மகப்பேற்று சத்திர சிகிச்சை நிபுணரால் மகப்பேற்று சத்திரசிகிச்சை , கற்பத்தடை சத்திரசிகிச்சை மற்றும் பெண் நோயியல் சம்பந்தமான சிகிச்சைகள் இடம்பெறுவதால் இது தொடர்பான நோயாளர்கள் வருகையும் அதிகரித்துள்ளமையை புள்ளி விவரங்கள் மூலம் அறிய முடிகிறது. (ம-36)

### தென்னையில் ஏறிய சிறுவன் தவறி வீழ்ந்ததில் காயம்

அளவெட்டி, ஏப்.30

தென்னை மரத்தில் ஏறி விளையாடிய சிறுவன் காய்ந்த ஓலையில் பிடித்தபோது மட்டை ஒடிந்ததால் வீழ்ந்து காயமடைந்தான்.

உடனடியாகத் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மல்லாகம் குளமங்கால் பகுதியில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த ஜெயதாசன் கனுசியஸ் (வயது-8) என்ற சிறுவனே இவ்வாறு காயமடைந்தவனாவான். (ம-36)

### முருகைக் கல் கொண்டு சென்றதால் 30 ஆயிரம் அபராதம்

இளவாலைப் பொலிஸ் பிரிவில் திருட்டுத்தனமாக முருகைக் கற்களை உழவு இயந்திரத்தில் கொண்டு சென்ற வேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மாதகல் மற்றும் பண்டத்தரிப்பைச் சேர்ந்த இருவர் சட்ட விரோதமான முறையில் முருகைக் கற்களை உழவு இயந்திரத்தில் கொண்டு சென்ற வேளையில் இளவாலைப் பொலிஸாரிடம் அகப்பட்டனர்.

இவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் இளவாலைப் பொலிஸாரால் முன்னிலைப் படுத்தப்பட்டபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இதனை அடுத்துத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டதுடன் முருகைக் கற்களும் பறிமுதல் செய்யப்பட்டன. (ம-86)

### கால்நடை வைத்தியர் நியமனம்

அச்சுவேலி, ஏப்.

அச்சுவேலி கால்நடை வைத்திய உப அலுவலகத்தில் வாரத்தில் மூன்று தினங்கள் கால்நடை வைத்தியர் தங்கியிருந்து சிகிச்சை அளிப்பார்.


அச்சுவேலி உப வைத்திய நிலையத்துக்கு பொறுப்பான வைத்தியராக எஸ்.நர்மஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி கால்நடை வைத்திய உப அலுவலகத்தில் செவ்வாய், வியாழன், சனி மூன்று தினங்களும் கால்நடை வைத்தியர் எஸ்.நர்மஜன் சேவையாற்றுவார் என்று யாழ். மாவட்ட கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்கள பணிப்பாளர் திருமதி வக்ஸலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அச்சுவேலி கால்நடை வைத்திய உப அலுவலகத்தின் கடமைகளை சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் கடந்த மூன்று வருடங்களாக கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் நா.சத்தியவாகீசன் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

## பாதீனியத்தை அழிப்பதில் ஏன் இந்தத் தாமதம்?

### கேட்கின்றனர் மக்கள்



அளவெட்டி, ஏப்.30

வலி வடக்கில் பல்கிப் பெருகும் பாதீனியத்தை அழிக்கும் நடவடிக்கை ஏன் தாமதத்தைக் கடைப்பிடிக்கின்றனர் என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குறிப்பாகத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, வைத்தியசாலையை அண்டிய பகுதிகளிலும் கட்டுவன் மீள்குடியேற்றப்பகுதிகள் அதே போல் வீமன்காமம், கொல்லங்கலட்டி, கீரிமலை, இளவாலை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் மக்கள் குடியமர்ந்த பகுதிகள் மற்றும் கைவிடப்பட்டுள்ள தரிசு நிலங்கள், தோட்டக் காணிகள், வீதி ஓரங்கள் ஆகிய இடங்களில் பாதீனியம் அதிகமாக காணப்படுகிறது.

இதன் காரணமாக பெரும் எண்ணிக்கையான விவசாய நிலங்கள் பாதிப்படையும் நிலையில் உள்ளன. பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாதுள்ளது.

எனவே இதனை முற்று முழுதாக அழிப்பதற்கு ஏற்ற ஆக்க பூர்வமான திட்டங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புதிய அணுகு முறைகளைக் கையாண்டு மேற்கொள்ள வேண்டும்.

சிரமதான அடிப்படையிலோ அல்லது வேறு நடவடிக்கைகளைக் கையாண்டோ விரைவாக விளை நிலங்கள், குடியிருப்புகளை ஆக்கிரமித்துள்ள நச்சுத் தாவரத்தை அழிக்க முன்வர வேண்டும் என்று வலி வடக்கு மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-36)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு நவீன வசதியுடன் அம்புலன்ஸ்

அளவெட்டி, ஏப். 29

தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு நவீன வசதிகளுடன் கூடிய அம்புலன்ஸ் ஒன்று ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியால் வழங்கப்பட்டுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், தெல்லிப்பளை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி எம்.உமசங்கர் ஆகியோரிடம் இந்த அம்புலன்ஸ் கையளிக்கப்பட்டது.

இந்தப் புதிய அம்புலன்ஸுடன் தெல்லிப்பளை வைத்தியசாலையில் உள்ள அம்புலன்ஸும் சேவையில் ஈடுபடுவதால் கடந்த காலங்களில் இருந்த நெருக்கடிகள் நீங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைப்பதில் இருந்த சிரமங்கள், தாமதங்கள் இனி ஏற்பட வாய்ப்புகள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் ஒரே ஒரு அம்புலன்ஸ் மட்டும் சேவையில் இருந்தமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-36)

## காசோலை மோசடி செய்த நபரைத் தேடும் பொலிஸ்

காசோலையைக் கொடுத்து பணத்தைப் பெற முயன்ற போது வங்கியில் பணம் இல்லாமை கண்டு பிடிக்கப்பட்டது

வலி. வடக்கு, ஏப்.30

3 இலட்சத்து30 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை கொடுத்து மோசடி செய்தமை சம்பந்தமாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் ஒருவர் தேடப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு திகதியிட்ட காசோலையை ஒருவர் கொடுத்துள்ளார்.

குறிப்பிட்ட திகதியில் காசோலையைக் கொடுத்து பணத்தைப் பெற முயன்ற போது வங்கியில் பணம் இல்லாமை கண்டு பிடிக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட நபரும் தலைமறைவாகியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் வல்வெட்டித்துறை பொலிஸார் குறிப்பிட்ட நபரைக் கைது செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-86)

### அச்சகக் கட்டடம் அமைக்க அடிக்கல்

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் வளாகத்தில் புதிதாக அச்சக கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கென கூட்டுறவு சபை மூன்று மில்லியன் ரூபா நிதியில் இந்தப் புதிய கட்டடத்தை அமைக்கவுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த வியாழக்கிழமை சுப வேளையில் இடம்பெற்றது. (ம-17)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
07.01.1947

ஆண்டவன் அடியில்
10.05.2012



**அமரர் பொன்னையா கணேசன்**

(ஸ்தாபகர், கணேசன் ஸ்ரோர்ஸ், வாகையடி, மட்டுவில் தெற்கு)

திதி: அபரபக்க பஞ்சமி (30.04.2013)

அன்பின் உருவாய் அறிவின் ஒளியாய்
நின்று எமைவிட்டு
நிரந்தரமாய்ப் பிரிந்து சென்று
ஆண்டொன்று ஆனதுவோ?
இணைபிரிந்த அன்றிலாக
இன்று துடிக்கின்றோம்....
எம்துயரம் என்று தீர்ப்போம்?

வாகையடிச் சந்தி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

அன்புடன்
குடும்பத்தினர்.

(35565) (6.7.45)

**புறோயிலர் குஞ்சு விற்பனைக்கு**

நியூ பேனாட், வகிறா, C.I.C கிறீன்வெலி, புசலாவ சமீர இறைச்சிக் கோழிக்குஞ்சு வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.

தொடர்பு: 077 595 9663
விநியோகத்தர்: மகாபார் ஹவுஸ்

**காணி வீடு விற்பனைக்கு**

077 949 8531,
077 684 8840.

## 31 ஆம் நாள் இதய அஞ்சலி

மண்ணில்
02*01*1966

விண்ணில்
31*03*2013



**சிங்காரம் சுரேந்திரன் (சுரேஸ்)**

*31ஆம் நாள் நினைவாக இன்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ். அடைக்கல நாயகி (O.L.R) ஆலயத்தில் நடைபெறும் திருப்பலி பூசையிலும், தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

7/1, அன்ன சத்திர ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைகளை பகுதியளவில் ஆரம்பிப்பதற்குத் திட்டம்

## மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.30
ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் காணப்படுகின்ற போட்டித்தன்மையை குறைக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.
அதற்கமைய பகுதியளவில் அரச பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் ஷனிகா ஹிரும்புரேகம தெரிவித்தார்.
ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் காணப்படுகின்ற போட்டித் தன்மை மாணவர்களை உளரீதியில் பாதிக்கின்றன என்று அவர் கூறினார்.

**ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு புலமைப்பரிசில் வழங்கி, மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பும் நடைமுறை ஒன்று முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.**

அதன் காரணமாக ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு புலமைப்பரிசில் வழங்கி, மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பும் நடைமுறையொன்றை ஏற்படுத்திக் கொடுக்க திட்டமிட்டப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)


## மும்மொழி பெயர் பலகைகள் இல்லாவிட்டால் நடவடிக்கை

### அடுத்து வரும் வாரங்களில் சுற்றிவளைப்பு




கொழும்பு,ஏப்.30
தேசிய கருமமொழி ஆணைக்குழுவின் கொள்கைகளுக்கு அமைய பஸ் பெயர் பலகைகளை தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட கால எல்லை நிறைவடைந்துள்ளது..
பெயர் பலகைகளை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தாத பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய கருமமொழி ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க தெரிவித்தார்.
அதற்காக பொலிஸாரின் ஒத்துழைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.
அதற்கமைய அரச கருமமொழி ஆணைக் குழுவின் கொள்கைகளுக்கு எதிராக செயற்படுகின்ற பஸ்கள் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சுற்றிவளைக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.(ச)

## வாகனப்புகை பரிசோதனை அடுத்தமாதம் நடைமுறைக்கு



கொழும்பு,ஏப்.30
வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையை பரிசோதனை செய்யும் நடவடிக்கை அடுத்த மாதத்திலிருந்து நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் எஸ்.எம்.ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.
வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும்போது, வாகனத்திலிருந்து வெளியேறும் புகை பரிசோதனைக்கு உட்படுத்துவது கட்டாயம் என்று அவர் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்போது வாகனங்களில் இருந்து அதிகளவான புகை வெளியேறுவதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.
அதற்கமைய வாகனங்களிலிருந்து வெளியேறும் புகைகளை பரிசோதனை செய்யும் நடவடிக்கை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
இந்தநிலையில் புகை பரிசோதனை உபகரணம் மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இந்தப் பரிசோதனையின் போது சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் புகை வெளியேறும் வாகனங்களின் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார். (ச)



தந்தை செல்வாவின் 36 ஆவது நினைவு தினத்தையொட்டி திருகோணமலை, சிவன்கோயில் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு நகரசபைத் தலைவர் க.செல்வராசா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெனார்த்தனன் ஆகியோர் மாலை அணிவித்தனர். (ச 40)

## ஒப்பந்த அடிப்படையிலான ஊழியருக்கும் சலுகைகள்

### சட்டம் கொண்டுவரப்படும் என்கிறார் காமினி லொக்குகே



கொழும்பு,ஏப்.30
ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் சகல சலுகைகளும் வழங்கப்படும் விதத்தில் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது என்று தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.
இதுகுறித்துஅவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் முதல் பங்குதாரர்களாக உள்ள தொழிலாளர் வர்க்கத்துக்கு நிவாரணங்கள், வசதிகள் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு கவனம் செலுத்திவருகிறது.
44 சம்பள நிர்ணய சபைகளை நடைமுறைப்படுத்தி 25 வீதத்துக்கும் 40 வீதத்துக்கும் இடையிலான ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதனூடாக 4 மில்லியன் ஊழியர்கள் நன்மை அடையவுள்ளனர்.
ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சகல சலுகைகளும் வழங்கப்படும் விதத்தில் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.
நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் முதல் பங்குதாரர்களாக உள்ள தொழிலாளர் வர்க்கத்துக்கு நிவாரணங்கள், வசதிகள் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு கவனம் செலுத்திவருகிறது. -என்றார். (ச)

## திரவப் பால் உற்பத்தி கடந்த ஆண்டு அதிகரிப்பு



திருகோணமலை,ஏப்.30
கடந்த ஆண்டில் திரவப்பால் உற்பத்தி 28 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.
பால் சேகரிப்பு 2011 ஆம் ஆண்டில் 143.7 மில்லியன் லீற்றர்களாக இருந்தது என்று கூறும் மத்திய வங்கியின் அறிக்கை கடந்த ஆண்டில் (2012) அந்த தொகை 183.6 மில்லியன் லீற்றர்களை எட்டியது என்றும் தெரிவித்துள்ளது.
திரவப்பால் விலை லீற்றருக்கு 50 ரூபாய்கள் என்றவாறு அதிகரித்துச் சென்றதன் காரணமாக கடந்த ஆண்டில் பால் பசுக்களின் எண்ணிக்கை 11 வீதத்தால் அதிகரித்தது எனவும் மத்திய வங்கியின் அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பங்களிப்பு அதிகரித்துள்ளமைக்கு, சிறு மற்றும் மத்திய அளவிலான பால் சேகரிப்பு நிலையங்களில் குளிரூட்டும் வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளமையும் காரணம் என்று அறிக்கை தெரிவிக்கிறது. (உ-22)

## விபசார விடுதிகளாகும் 'மசாஜ்' நிலையங்கள்

### மூடுமாறு மக்கள் வலியுறுத்து

திருகோணமலை,ஏப்.30
திருகோணமலை அலஸ் தோட்டம் பகுதிகளில் மசாஜ் நிலையங்கள், உடல் ஆரோக்கியத்துக்கான தசை அழுத்தம், என்ற பெயரில் சட்ட விரோத விபச்சார விடுதிகள் இயங்கி வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.
இது தொடர்பான விசேட பத்திரிகையாளர் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. கலந்துரையாடலில் கிராம மாதர் சங்கத்தினர், ஆலய பரிபாலண சபை பிரதிநிதிகள், சமாதான நீதிவான்மார் விளையாட்டுக்குழு, இளைஞர் கழகங்கள், பொது மக்கள் என அலஸ்தோட்டக் கிராமத்தைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.
கடந்த 22 ஆம் திகதி இரவு 10.45 மணியளவில் மசாஜ் நிலையம் ஒன்றிலிருந்து பெண் ஒருவர் கத்தும் சத்தம் கேட்டதாகவும் அதனை அடுத்து கிராம மக்கள் அந்த மசாஜ் நிலையத்தின் வாசலுக்குச் சென்ற போது விடுதியிலிருந்து கருப்பு இன்டர் கூலர் வாகனமொன்று மக்களை நோக்கு நோக்கி மிக வேகமாக வந்து வெளியேறிச் சென்ற தாகவும் சாட்சிகள் கூறினர்.
உள்ளே சென்று பார்த்தால் 20 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவர் அரை நிர்வாணமாக மயங்கிய நிலையில் காணப்பட்டார்" என்று கூறினர்.
அடுத்த அறையில் இரண்டு இளம் பெண்கள் இருந்ததையும் இரு ஆண்கள் அங்கிருந்து தப்பி ஓடியதையும் தாம் கண்டனர் என்று மக்கள் கூறினர். மசாஜ் நிலையத்தை நடத்தும் முகாமையாளர் மற்றும் வாடிக்கையாளர் ஒருவரும் கிராம மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மயங்கிய நிலையில் காணப்பட்ட பெண் புத்தளம் முந்தல் பகுதியைச் சேர்ந்த சிங்களப் பெண் என தெரிய வருகிறது.
இவர் தற்போது திருகோணமலை பொது வைத்திய சாலையில் பெண் பொலிஸ் ஒருவரின் கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வருகி றார்.
தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்குடன் மசாஜ் நிலையத்தில் இருந்த சந்தித்த பெண் அங்கிருந்து தப்பிச் சென்ற வாகனத்தில் சென்றிருக்கலாம் என சம்பவ இடத்துக்குச் சென்ற கிராம மாதர் சங்கத்தின் பெண்கள் சந்தேகிக்கின்றனர்.(உ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** பழைய கசப்பான சம்ப வங்களை பேசிக்கொண்டிருக்க வேண் டாம்-. உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அடுத்தவர்கள் விவகாரங் களில் தலையிடுவதால் வீண் பழிக்கு ஆளாவீர்கள். யாரையும் யாருக்கும் நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் வரும்.

**இடபர்:** மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாக சிரித்துப்பேசும் சூழல் அமையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். முன்கோபம் விலகும்.

**மிதுனர்:** ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிட்டும். மனக்குழப்பங்கள் நீங்கும். சகோதரவகையில் மகிழ்ச்சியுண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கடகர்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**சிங்கர்:** நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**கன்னி:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**நாளை**

சித்திரை-18 புதன்கிழமை 01.05.2013
திதி: ஷஷ்டி பி.ப. 12.32 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப. 08.30 வரை
சுபநேரம்: 04.27- 05.57 வரை
இராகுகாலம்: 11.57- 01.27 வரை

**துலார்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகர்:** தேவையற்ற அலைச்சலுக்கு ஆள்படுவீர்கள். சிலரின் நயவஞ்சகச் செயலை நினைத்து வருந்துவீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

**தனுசு:** எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். உறவினர், நண்பர்கள் சிலர் பணம் கேட்டு தொந்தரவு தருவார்கள். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மனத்தாங்கல் ஏற்படும்.

**மகரர்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீகள். அயல் வீட்டாரின் ஆதரவு கிட்டும்.

**கும்பர்:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். முன்கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மீனர்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 5 | | 4 | 1 | | 7 | 3 |
| | | | | 5 | | | | 1 |
| | 7 | | | 9 | 3 | | | |
| | 6 | 9 | | | 8 | 4 | | 7 |
| 2 | | 4 | | | | 1 | | 5 |
| 7 | | 1 | 4 | | | 2 | 9 | |
| | | | 5 | 8 | | | 2 | |
| 9 | | | | 6 | | | | |
| 6 | 5 | | 3 | 2 | | 7 | | 4 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 8 | 9 | 1 | 5 | 4 | 2 | 7 |
| 4 | 5 | 1 | 2 | 7 | 6 | 8 | 3 | 9 |
| 7 | 9 | 2 | 3 | 8 | 4 | 1 | 5 | 6 |
| 3 | 8 | 4 | 1 | 2 | 9 | 6 | 7 | 5 |
| 2 | 6 | 7 | 4 | 5 | 3 | 9 | 1 | 8 |
| 5 | 1 | 9 | 7 | 6 | 8 | 3 | 4 | 2 |
| 1 | 4 | 6 | 5 | 9 | 7 | 2 | 8 | 3 |
| 8 | 7 | 3 | 6 | 4 | 2 | 5 | 9 | 1 |
| 9 | 2 | 5 | 8 | 3 | 1 | 7 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# 12ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் சுப்பிரமணியம் சதீஸ்குமார்



**அன்னையின் மடியில் - 04.04.1970**
**ஆண்டவன் அடியில் - 13.05.2001**
**திதி: சஷ்டி**

மென்மையான உன் சிரிப்பும் அர்த்தமான உன் பேச்சும்
எங்கள் கண்களில் உன் உருவமே தெரியுதடா
நீ பத்து வருடங்களாக சுவிஸ் நாட்டில் நின்றும் உன்னுடைய
கதைகள் தான் எம் நெஞ்சினில் விட்டகலவில்லையே
நீ விரைவில் எம் முன் வருவாய் என்றிருந்தோம்
நீ எம் நினைவை கானல் நீராக்கிவிட்டாயே
இழப்புக்கள் எவ்வளவு கொடுமை என்று உணர்ந்தோம்
நாம் உன்னை இழந்தபின் தான்
வளர்த்த எம்மையும் உன் உற்றாரையும் தவிக்கவிட்டு வானுலகு
சென்றது எம் நெஞ்சினில் வலித்துக்கொண்டே இருக்குதடா
உன் மலர்ந்த வதனச் சிரிப்பை வாழ்நாளில் காணக்கிடைக்குமா?

**உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென எங்கள் குலதெய்வங்களை வேண்டி நிற்கும்**

உன் அப்பா: **சுப்பிரமணியம்,** அம்மா: **சித்திரா,**
தங்கைமார்: **த.சதீஸ்வரி, ஈ.சதீஸ்கலா(சுவிஸ்),சு.சதீஸ்குமாரி.**
தம்பி: **சு.சதீஸ்வரன்(லண்டன்).**
அத்தான்மார்: **ஆ.தங்கராசா,இ.ஈஸ்வரன்(சுவிஸ்),த.சுகுணன்.**
மருமக்கள்: **த.சபிதா,த.சதீஸ்குமார்,அக்சரா,அச்சரன்,சு.சாஜித்தியா, [illegible] சாகித்தியன்.**
[illegible] **(பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர்).**
பெறாமக்ககள்: **அஸ்னா,ஆதிறா.**

**வல்லியாவத்தை,**
**கரணவாய் மேற்கு,கரவெட்டி.**
**021 226 2369**

(35341)(5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓட்டமாவடியில் கைக்குண்டு மீட்பு



மட்டக்களப்பு, ஏப்.30
மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஓட்டமாவடி, தாபாலக வீதியருகில் புதைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றினை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரின் உதவியுடன் இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

வர்த்தக நிலையத்துக்கு முன்னாலுள்ள பகுதியை துப்புரவு செய்த நிலையிலேயே மண்ணுக்குள் புதைந்த நிலையில் குறித்த வெடி குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்தே பொலிஸார் குண்டை மீட்டுள்ளனர். (ச)

## திடீர் தீயால் வர்த்தக நிலையங்கள் சேதம்

கொழும்பு, ஏப்.30
படல்கும்பரை நகரின் மூன்று வர்த்தக நிலையங்கள் திடீரென்று ஏற்பட்ட தீயினால் முற்று முழுதாக எரிந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இடம்பெற்றது என்று படல்கும்பரைப் பொலிஸார் தெரிவித்தனர்.

படல்கும்பரை நகரின் மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம், பாதணிகள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம், உணவகம் ஒன்று ஆகியனவே தீயினால் பலத்த சேதத்துக்குள்ளானவையாகும்.

இந்தச் சேத விவரம் இதுவரை மதிப்பீடு செய்யப்படாதிருந்த போதிலும், ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதிமிக்க பொருள்கள் சேதமாகியுள்ளன என்று உரிமையாளர்களினால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மின் ஒழுங்கே, இந்தத் தீ ஏற்பட காரணமென்று ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ச)

# பெண்கள், குழந்தைகளை விற்கும் நாடு இலங்கை

## மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் மனமேந்திர தெரிவிப்பு



**மனித உயிருக்கான மரியாதை அற்றுப் போயுள்ளது. பிறந்த குழந்தையை கைவிட்டுச் செல்கின்றனர்; குழந்தையை வீசி எறிகின்றனர்.**

கொழும்பு, ஏப்.30
பெண்கள், குழந்தைகள் விற்பனை செய்யப்படும் உலகின் மிகப் பிரதானமான நாடாக இலங்கை திகழ்கின்றது என்று மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீப மனமேந்திர தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடற்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் தங்காலை கரையின் ஊடாக ட்ரோலர் படகைப் பயன்படுத்தி 35 நாள்களில் ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களைக் கடத்துகின்றனர்.

வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட அடிமைச் சேவக முறைமை இன்று சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கையாக மாற்றமடைந்துள்ளது.

மனித உயிருக்கான மரியாதை அற்றுப் போயுள்ளது. பிறந்த குழந்தையை கைவிட்டுச் செல்கின்றனர்; குழந்தையை வீசி எறிகின்றனர்.

சந்தேகநபர்களை பொலிஸார் சித்திரவதை செய்ய முடியாது.

இந்த ஆண்டில் இதுவரையில் இவ்வாறான சித்திரவதைகள் தொடர்பில் ஒரு சம்பவமே பதிவாகியுள்ளது. எனினும், ஏதேச்சாதிகாரமாக கைது செய்தல் தொடர்பில் 30 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிராகப் பதிவாகியுள்ளது.

பொலிஸ் நிலையங்களில் ஒரு முறைப்பாட்டை சரியான முறையில் பதிவு செய்யக்கூடிய அதிகாரிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

சட்டவிரோதமான உத்தரவுகளை கடைநிலை அதிகாரிகள் பின்பற்ற வேண்டியதில்லை.-என்றார். (ச)



'ஒருமைப்பாட்டுக்கான பேரணி' எனும் தொனிப்பொருளிலான பாதயாத்திரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம் பெற்றது. இதில் அரசியல் வாதிகள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச)

## கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம்



கொழும்பு, ஏப்.30
பெருந்தோட்ட தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக உண்ணாவிரத போராட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா மாநகரசபை திறந்த வெளி அரங்கில் நடைபெற்றது.

புதிய மலையகம் அமைப்பு ஏற்பாடு செய்த இந்த உண்ணாவிரதப் போராட்டம் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்றது.

நுவரெலியா சென் அன்றூஸ் வீதியில் எதிர்ப்பு ஊர்வலம் ஆரம்பமாகி பழைய கடை வீதி, புதிய கடை வீதி, எலிசபெத் ராணி வீதி மற்றும் லோசன் வீதி ஆகியவற்றின் ஊடாக பிரதான மேடையை வந்தடைந்தது.

'கண்டீர்களா? ஆராஜகவாதிகள் யார் என்று கண்டீர்களா?, அரசே எம் மக்களின் பிரச்சினையில் தலையிடு, ஜனாதிபதியே எமக்கு தீர்வு வேண்டும், மக்களுக்காக கட்சியா? கட்சிக்காக மக்களா?, தேர்தல் வெற்றிதான் சமூக வெற்றியா?, எமது மக்களின் வயிற்றில் அடிக்காதே' உள்ளிட்ட பல சுலோகங்களை ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கிராம அலுவலர் பிரிவுகள் இனி 450 ஆக குறையும்

### புதிய யோசனைகள் நடைமுறைக்கு

கொழும்பு, ஏப்.30
பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை நிர்ணயிக்கும் குழுவின் ஆலோசனைகளுக்கு அமைய, தற்போதுள்ள கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை 450 வரை குறைவடையவுள்ளது.

இவ்வாறு நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள பிரதேச செயலர் பிரிவுகளின் எண்ணிக்கை 10 ஆல் அதிகரிக்கப்படவுள்ளது.

மூன்று ஆண்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்பட்டுள்ள இந்தக் குழுவின் அறிக்கை மூலமாக 50 குடும்பங்களுக்குக் குறைந்த, 10-12 குடும்பங்களைக் கொண்டுள்ள கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் அதிகம் இருப்பது தெரிய வந்துள்ளது.

இந்தப் பிரிவுகள் 1000 குடும்பங்களுக்கு மேறபட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் இணைக்கப்பட்டதனால் பிரிவுகளுடன் எண்ணிக்கை குறைவடைந்துள்ளன என்று குறித்த குழுவின் உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

இந்தக் குழுவின் அறிக்கை தற்போது அமைச்சர் டபிள்யு. டீ.ஜே.செனவிரத்னவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதுமாக 332 பிரதேச செயலர் பிரிவுகளும், 1402 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## அமைச்சர் பவித்ராவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை



கொழும்பு, ஏப்.30
மின் சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையொன்றைக் கொண்டு வர ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பிலான பிரேரணை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவால் நாடாளுமன்ற செயலர் தமிக்க திசாநாயக்காவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, தயாசிறி ஜயசேகர, அகில விராஜ் காரியவசம், ரஞ்சன் ராமநாயக்க, சந்திரனி பண்டார மற்றும் ஆர்.யோகராஜன் உட்பட 12 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

மின் சக்தி அமைச்சராக பதவி வகித்த சம்பிக்க ரணவக்கவால் நிராகரிக்கப்பட்ட இந்த முன்மொழிவை, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நடைமுறைப்படுத்தியுள்ளார் என்று பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## ஒரே வங்கிக் கணக்கின் கீழ் 'ஈ.பி.எப்.'

**கணினிமயப்படுத்தப்பட்டு வருவதன் மூலம் நபர் ஒருவர் எத்தனை நிறுவனங்களில் தொழில் புரிந்தாலும் அவருக்கான நிதியத்தை ஒரே வங்கிக் கணக்கில் கொண்டு வர முடியும்.**

கொழும்பு, ஏப்.30
ஊழியர் சேமலாப நிதியத்தை (ஈ.பி.எப்.) ஒரே வங்கிக் கணக்கின் கீழ் கொண்டு வரவும், தொழில் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வழக்குகள் தொடர்பிலான தகவல்களை கணினிமயப்படுத்தவும் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழிலாளர்களினதும், ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் பெற்றவர்களினதும் நலன் கருதி இந்த நடவடிக்கையை அமைச்சு மேற்கொண்டுள்ளது என்று தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பு, மஹாவெலி கேந்திரத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்வேறு நிறுவனங்களில் தொழில் புரிந்த ஒருவருக்கு இதுவரை காலமும் அந்தந்த நிறுவனங்களினால் வெவ்வேறு வங்கிக் கணக்குகளில் ஊழியர் சேமலாப நிதியம் வைப்பிலிடப்பட்டு வருவதனால் தனது ஈ.பி.எப் தொகை தொடர்பில் தகவல் பெறும் நபர் பெரும் சிரமத்துக்கு முகம் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில் கணினிமயப்படுத்தப்பட்டு வருவதன் மூலம் நபர் ஒருவர் எத்தனை நிறுவனங்களில் தொழில் புரிந்தாலும் அவருக்கான ஊழியர் சேமலாப நிதியத்தை ஒரே வங்கிக் கணக்கில் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தனது பதிவு இலக்கத்தை வைத்து ஊழியர் சேமலாபநிதியத்தின் மிகுதித் தொகையை இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஊழியருக்கு முடியும்.

இந்தப் புதிய நடைமுறைக்குள் உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்டவர்கள் ஊடாக விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தொழில் பிரச்சினைகள் தொடர்பில் தொழில் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பான தகவல்களையும் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வழக்கின் தன்மை, நீதிமன்றம், வழக்கு நடைபெறும் திகதி போன்ற தகவல்களை இணையத் தளத்தின் மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆலய புனரமைப்பு பணி நிறைவு

ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேசுவரர் ஆலய புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்து வருகின்றன. இவ்வாலயத்தின் மஹாகும்பாபிஷேகம் மே மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பல லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு வரும் இவ் வாலயம் புதுப் பொலிவுடன் மிகவும் எழுச்சி பெற்ற ஆலயமாக காணப் படுகின்றது. (வ-86)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 30.04.1930 இறப்பு 31.03.2013



அமரர் திரேசம்மா ஞானமுத்து

இன்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலி நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்வதுடன்,

மேலும் அன்னாரின் இறுதிச் சடங்கின் போது அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் மற்றும் நாம் துயரடைந்த போது அனைத்து வழிகளிலும் துயரில் கலந்து அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைக் கூறுகின்றோம்.

கோப்பாய் தெற்கு. கோப்பாய்.

பாசப்பிரிவின் கவலைகளுடன் பிள்ளைகள். மருமக்கள். பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்.

(36868)(6.11)


## கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா

சரசாலை வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் மகாகும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் மலரின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளையும் நயப்புரையை சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பால ஷண்முகனும் நிறைவுரையை வரணி சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் வை.விஜயகுமாரனும் நிகழ்த்துவர்.

48 தினங்களாக ஆலயத்தில் மண்டலாபிஷேகம் இடம்பெறும் நிலையில் நிறைவு நாளான புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளதாகவும் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (வ-86)


## VOGT
## மீளக்குடியமர்ந்த மாதர்களுக்கான வாழ்வாதார உதவி

வடமராட்சிப் பகுதியில் மீளக்குடியமர்ந்த 18-35 வயதுக்குட்பட்ட முச்சக்கர வண்டி ஓட்டக்கூடிய இரு மாதர்களுக்கு முதற்கட்டமாக கடன் அடிப் படையில் முச்சக்கர வண்டி (Auto) வழங்க வடம ராட்சி நல்லொழுக்க நிறுவனம் முன்வந்துள்ளது.

விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகப் பெற்று பூர்த்திசெய்து தருமாறு வேண்டு கின்றோம்.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT)
மாலுசந்தி, அல்வாய்.
தொலைபேசி இல. 0212263474

(சி/8466) (10,6)



## விற்பனைக்கு

NP XO-6692 இலக்கமுடைய Yamaha FZ 16 3700 km ஓடிய பைக் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0776245114

(36861) (10,6)



## TV கள் மலிவு விற்பனை

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21''- 12000/= முதல், 25''- 13600/=, , 29''- 16000/= Panasonic (பனசோனிக்) 29'' -15000/= DTS அம்பிளிபயர், Box வகைகள், DVD -3000/=

தொடர்பு: 077 844 9829 (அப்பன்)
பேனி ரேடியோ சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
59, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

(36877)(5.6)



## கண்ணீர் அஞ்சலி



மல்லாகம்/தெல்லிப்பழை லயன்ஸ் கழக அங்கத்தவர்
லயன் Dr. ஆறுமுகம் சிவபாதம்
அவர்களின் அன்பு மனைவி
Dr. யோகீஸ்வரி சிவபாதம்

அவர்களின் மறைவையொட்டி துன்புற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், கழக அங்கத்தவர்கள்
லயன்ஸ் கழகம், மல்லாகம்/தெல்லிப்பழை.

(36882)(6.11)



## கண்ணீர் அஞ்சலி



பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய திருப்பணிச் சபையின் பொருளாளர்
Dr. ஆ.சிவபாதம்
அவர்களின் அன்பு மனைவி
திருமதி யோகீஸ்வரி சிவபாதம் (பவளம்)

அவர்களின் மறைவுக்கு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய திருப்பணிச் சபையும்,
தொண்டர் சபையும்.
பத்திரகாளி சமேத
வீரபத்திரர் ஆலயம்,மல்லாகம்.

(36871)(6.11)



## மரண அறிவித்தல்

### திருமதி கைலாசபிள்ளை குணபூசனம்



வேலணை கிழக்கு,4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை குணபூசனம் நேற்று(29.04.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை யின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம்,இந்துமதி, பாலசுந்தரம், நாகேஸ்வரி, யோகேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவமலர், விநாயகமூர்த்தி, இராசம்மா, காலஞ் சென்ற பரமேஸ்வரன் மற்றும் பாஸ்கரன் (கண்ணன் பேக்கரி) புஸ்பா ஆகியோரின் அன்பு மாமியும், பாலேந்திரன், மணிமாறன் (ஸ்பெயின்), வேந்தன்(பிரான்ஸ்), வாணி,சுரேஸ் (ஜேர்மனி), சுபா(லண்டன்),சுதா(ஸ்பெயின்), சதீஸ்(கொழும்பு), தமிழினி(லண்டன்), பாலினி(பிரான்ஸ்), மோகன், மாலினி, வவா,தீபன், பிரதீபன், நிஷா, நிதர்சன்(ஸ்பெயின்), லக்சன், நிருஜன், திவ்யா, துஸ்யந்(பிரான்ஸ்) விதுஷன்,செந்துஷன்,அரவிந்,அபி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டினு,சௌமி, அக்ஷா, டக்ஷி,லக்சகி நிக்ஷன்,நிரு, தர்சி, விஜிகரன், றஜி, விதுஷா, தீபக், சச்சின்,ஹரிஸ், யதுஷ்,சுருதி,சகானா,ஆகாஷ், றூணுசன், கனிஸ்ரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

வேலணை கிழக்கு,
4ஆம் வட்டாரம்,வேலணை.


தகவல்: குடும்பத்தினர்.

(36880)(5.6)



## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செல்வராசா



நயினாதீவு,6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது முள்ளிவீதி, அரியாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான வேலுப்பிள்ளை செல்வராசா 28.4.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா- பூமாலட்சுமி தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் (சின்னக்கிளி) அன்புக் கணவரும், சதாசிவத்தின் (சதா) அன்புச் சகோதரனும், பவானி, காலஞ்சென்ற நாகம்மா(புஷ்பம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்ற பூவிலிங்கத்தின் சகலனும், செல்வக்குமார் (கண்ணன்), யோகவதனி (சுவிஸ்), நவக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தரூபி, சுரேஸ்(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், சிந்துஜா, கபிசனா, அனுஷா(சுவிஸ்), சுஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.04.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப.10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, முள்ளி வீதி,
அரியாலை,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 490 0728

தகவல்: குடும்பத்தினர்.

(36873)(5.6)



## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பரமசிவம்



நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகவும், கொழும்பில் வசித்து வந்தவரும், தற்போது யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இல.52, பிள்ளையார் வீதியை (தபால் பெட்டி சந்திக்கு முன்னால் உள்ள கிழக்கு ஒழுங்கை, தலங்காவில் பிள்ளையார் கோயிலடி) வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பரமசிவம் (25.04.2013) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், லோகேஸ்வரி (ஹொலன்ட்), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), மோகனதாஸ், கண்ணதாசன் (கனடா, முன்னாள் ஆசிரியர், St.Thomas Preparatory School, Kollupitty, ஸ்தாபகர்-KPS Academy, Kotahena) விக்னேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகசபை (ஹொலண்ட்), கமலேந்திரன் (பிரான்ஸ்), அமிர்தாம்பிகை, விஜிதா (கனடா), பிரேம்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், அருள்நேசன், நவரோபினி, பிரவின், ரோஷ்னி, அரேஷ், அனுஷியா, அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வீரவாகு, நேசமணி மற்றும் லீலாவதி, கனகாம்பிகை, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, செல்லத்துரை மற்றும் கோபாலபிள்ளை, சண்முகநாதன் (JP), காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் விசுவலிங்கம், செல்லத்துரை, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் முத்துலெட்சுமி, கோபாலன், சிவசிதம்பரம், சண்முகநாதன், கமலேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2013) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

52, பிள்ளையார் வீதி, திருநெல்வேலி.
தொடர்புகளுக்கு: மோகனதாஸ் (மகன்),
0776 124504, 0774 424 463

தகவல்: குடும்பத்தினர்.

(36874)(10.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடைப்பந்தாட்ட போட்டிகள் இன்று

வலி.வடக்கு, ஏப்.30
இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் யாழ். மாவட்ட பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளனங்களுக்கு இடையேயான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இப்போட் டியில் நான்குக்கு மேற்பட்ட அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. (ற-86)

## பங்குபற்றும் அணிகள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.30
கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது
மேற்படி போட்டியில் பங்குபற்றவுள்ள அணிகள் விண்ணப்பபடிவங்களை போட்டிக் குழுவினரிடம் பெற்று அதனை 1ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு போட்டிக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ற-23)

## சதுரங்கச் சுற்றுப் போட்டி முடிவுகள்

நெல்லியடி, ஏப்.26
வலுவேலு இலங்கேஸ்வரன் அவர்களின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, திருநாவலர் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த சதுரங்கப் போட்டியின் முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.
இதில் 9 வயது, 11 வயது, 13 வயது, 15வயது, 17 வயது பிரிவுகளின் போட்டி முடிவுகள் வருமாறு:
9 வயது ஆண்கள் பிரிவு
1 ஆம் இடம்: அ.சாகினஞ்ஞை (தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை), 2 ஆம் இடம்: சி.அஞ்ஞன் (தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), 3 ஆம் இடம்: செ.அபிஷேன் (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை).
9 வயது பெண்கள் பிரிவு
1 ஆம் இடம்: ந.நிவேதா (தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம்: க.கவிவர்ஷா (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை).
11 வயது ஆண்கள் பிரிவு
1 ஆம் இடம் இ.சுதன்ராஜ் (உடுப்பிட்டி அ.மி.த.க. பாடசாலை), 2 ஆம் இடம்: (தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), 3 ஆம் இடம்: செ.நிவேரகன் (உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலை), நி.அபிஷேக் (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை).
11 வயது பெண்கள் பிரிவு
1 ஆம் இடம்: இ.பிரவீனா (தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), 2 ஆம் இடம்: வ.வைதேகி (வட இந்து ஆரம்பப் பாடசாலை), 3 ஆம் இடம்: பி.சாகித்யா (வட இந்து ஆரம்ப பாடசாலை).

(தொடரும்)

15 வயது ஆண்கள் கரப்பந்து

# ஆவரங்கால் மகாஜனா சம்பியனாகத் தெரிவு



வலி.வடக்கு, ஏப்.30
யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.
ஆவரங்கால் நடராசா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலயமும், ஆவரங்கால் மகாஜன வித்தியாலயமும் மோதிக் கொண்டன.
இரு அணிகளும் பலம் பொருந்தியவையாகக் காணப்பட்டமையால் ஆட்டம் விறுவிறுப்பாகக் காணப்பட்டது.
மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் முதற் சுற்றை கோப்பாய் மகா வித்தியாலயம் 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. எனினும் அடுத்து இரு சுற்றுக்களையும் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் 25:20, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிக் கொண்டது.
இறுதியில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் 2:1 என்ற ரீதியில் கோப்பாய் மகா வித்தியாலயத்தை வீழ்த்தி மாவட்ட சம்பியனாகத் தெரிவானது. (ற-86)



முன்னாள் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஜே.எவ்.ஏ.றூபசிங்கம் விளையாட்டுத்துறைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தால் நடத்தப்பட்ட கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. அதன்போது முன்னாள் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் ஏகாம்பரம் திருமதி ஜே.எவ்.ஏ. றூபசிங்கத்துக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். தொடர்ந்து யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் கி.மனோகரன் நினைவுப் பரிசில் வழங்கினார். (ற-23)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்க சுற்றுப்போட்டி

## நீர்வேலி ஐக்கியம், மட்டுவில் ஜங்கரன் இறுதியாட்டத்துக்கு தெரிவாகின

யாழ்ப்பாணம், ஏப்.30
யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடந்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'ஏ' பிரிவு பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது
நேற்றுமுன்தினம் ஞாயிறுக் கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சங்கானை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.
இதேவேளை, 'பி' பிரிவு ஆண்கள் அணிகளுக்கு இடையே நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் ஜங்கரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சங்கனை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது .
3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் மட்டுவில் ஜங்கரன் விளையாட்டடுக்கழக அணி 3.0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.
(ற-23)

## சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத்தில் பரந்தாமன் அணி வெற்றி

மல்லாவி, ஏப்.30
பாரம்பரிய கலாசார விழாவை முன்னிட்டு நெடுங்கேணி பிரதேச செயலக அணியினருக்கும் பரந்தாமன் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் நட்பு ரீதியான கிரிக்கெட் விளையாட்டுப்போட்டி அண்மையில் சேவா லங்கா அனுசரணையுடன் நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.
நாணயச் சுழற்சி முறையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பரந்தாமன் அணி 12 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 63 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ்.டினேஸ் 15 ஓட்டங்களையும் சசிகரன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.
நெடுங்கேணி பிரதேச செயலக அணி 10 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. பரந்தாமன் அணி 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. சிறப்பாட்ட வீரராக எஸ்.தினேஸ் தெரிவு செய்யப்பட்டார். இந் நிகழ்வில் வீரர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன. (ற-500)

## கயிறு இழுக்கும் போட்டியில் உடுவில் இளைஞர் மன்றம் சம்பியன்



வலி.வடக்கு, ஏப்.30
இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டதேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் யாழ். மாவட்ட பிரதேச சேவைகள் மன்ற சம்மேளனங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் உடுவில் பிரதேச செயலக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளன அணி யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஊர்காவற்துறை பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளன அணியும் உடுவில் பிரதேச இளைஞர் சேவைகள் மன்றசம்மேளன அணியும் மோதிக் கொண்டன.
மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை உடுவில் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளன அணி வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ற-86)

## வலிகாமம் வலய கபடி

### 19 வயது ஆண்கள் பிரிவில் ஹென்றியரசர் சம்பியன்

வலி.வடக்கு, ஏப்.30
வலிகாமம் வலயப் பாடசாலை அணிகளுக்குஇடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.
பரப்பாக இடம்பெற்ற போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 66:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வலய சம்பியனாகத் தகுதி பெற்றது. (ற-86)

### 19 வயது பெண்கள் பிரிவில் இள.கன்னியர்மடம் சம்பியன்

வலி.வடக்கு, ஏப்.30
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் மீண்டும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையும், இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயமும் மோதின.
இரு அணிகளும் மாறி மாறி முன்னிலை பெற்றுக்கொண்டிருந்தன. இறுதி நேரத்தில் கன்னியர்மடம் மகா வித்தியாலயம் தனது அனுபவம் கொண்ட விளையாட்டின் மூலம் வெற்றி வாய்ப்பைத் தனதாக்கிக் கொண்டது. இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் 39:30 புள்ளிகள் என்ற அடிப்படையில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியை வீழ்த்தி சம்பியனானது.(ற-86)

சாவற்கட்டு மகாத்மா உதைபந்து தொடர்

## மகாத்மா 'ஏ', கலையொளி இறுதியாட்டத்தில் மோதல்

யாழ்ப்பாணம், ஏப்.30
சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம் நடந்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டத்தில் சாவற்கட்டு மாகாத்மா விளையாட்டுக்கழக 'ஏ' அணி, ஆனைக் கோட்டை கலையொளி விளையாட்டுக்கழக அணி என்பன இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன .
கடந்த வியாழக்கிழமை சாவற்கட்டு மாகத்மா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் முதலில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுகழக 'ஏ' அணியை எதிர்த்து மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. அதில் சாவற்கட்டு மாகத்மா விளையாட்டுக்கழக 'ஏ' அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
தொடர்ந்து இடம் பெற்ற இரண்டவது அரையிறுதியாட்டத்தில் ஆனைக் கோட்டை கலையொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
அதில் ஆனைக்கோட்டை கலையொளி விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.(ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோர்னர் அதிரடி கவிழ்ந்தது புனே



வோர்னர் அதிரடியாக அரைச் சதம் அடிக்க, டில்லி அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் புனே அணியை வீழ்த்தியது.

ஆறாவது ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் சட்டீஸ்கர் தலைநகர் ராய்பூரில் புதிதாக கட்டப்பட்ட வீர நாராயண் சிங் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் டில்லி, புனே அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புனே அணித் தலைவர் ஆரோன் பின்ச், முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தார்.

டில்லி அணிக்கு எதிர்பார்த்த ஆரம்பம் கிடைக்கவில்லை. டிண்டா ''வேகத்தில்' மஹேல ஜெயவர்த்தன (12), வெளியேறினார். புவனேஷ்வர், லுக்ரைட் ஆகியோரின் பந்தில் தலா ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி விளாசிய சேவக் (28) அதிக நேரம் நிலைக்கவில்லை. உன்முக்த் சந்தும் (17) சோபிக்கவில்லை. பென் ரோரர் (13), அபிஷேக் நாயரிடம் சரணடைய, 4 இலக்கு இழப்புக்கு டில்லி அணி 96 ஓட்டங்கள் எடுத்து தவித்தது.

பின் டேவிட் வோர்னர், கேதார் ஜாதவ் சேர்ந்து அணியை மீட்டனர். டிண்டாவின் பந்துப்பரிமாற்றத்தில் மூன்று பவுண்டரிகள் அடித்தார் வோர்னர். தொடர்ந்து வாணவேடிக்கை காட்டிய இவர், ராகுல் சர்மா பந்தில் ஒரு சிக்ஸர் அடித்தார். பின் ரிச்சர்ட்சன் பந்துவீச்சில் மூன்று சிக்ஸர்கள் விளாசி, இந்தத்தொடரில் தனது 3ஆவது அரைச் சதத்தைப் பதிவு செய்தார். ஜாதவ் 25 ஓட்டங்களுடன் வெளியேறினார். இறுதி 5 பந்துப் பரிமாற்றங்களில் 63 ஓட்டங்கள் எடுக்கப்பட, டில்லி அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது. வோர்னர் (51), இர்பான்பதான் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


சவாலான இலக்கை விரட்டிய புனே அணிக்கு உத்தப்பா, ஆரோன் பின்ச் சேர்ந்து வலுவான அடித்தளம் அமைத்தனர். மோர்னே மோர்கல் பந்துப் பரிமாற்றத்தில் உத்தப்பா இரண்டு பவுண்டரிகள் அடித்தார். இர்பான் பதான்பந்துப் பரிமாற்றத்தில் பின்ச் மூன்று பவுண்டரிகள் விளாசினார். எனினும் பதானின் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் இரட்டை ''அடி' விழுந்தது. 2ஆவது பந்தில் உத்தப்பாவும் (37) 6ஆவது பந்தில் நடுவரின் தவறான தீர்ப்பால் பின்ச்சும் (37) பரிதாபமாக வெளியேறினர்.

இதன்பின் யுவராஜ் சிங், லுக் ரைட் சேர்ந்து போராடினர். இந்த நேரத்தில் 18ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய உமேஷ் யாதவ் திருப்புமுனையை ஏற்படுத்தினார். இவரது ''வேகத்தில்' ரைட்(19), யுவராஜ்(31) வெளியேற, போட்டி டில்லி வசம் வந்தது.

கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் புனே வெற்றிக்கு 28 ஓட்டங்கள் தேவைப்பட்டன. நதீம் கலக்கலாக பந்துவீசினார். ஸ்டீவன் ஸ்மித் ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்த போதும், 12 ஓட்டங்கள் தான் கிடைத்தன. புனே அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்கு இழப்புக்கு 149 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது. ஸ்மித்(17), மிதுன் மன்ஹாஸ்(2) ஆட்டமிழக்காது இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை வோர்னர் வென்றார்.''மின்னல்' அரைசதம்.

நேற்றுமுன்தினம் டில்லி அணியின் டேவிட் வார்னர், 24 பந்தில் அரைசதம் அடித்தார். இதன்மூலம் 6ஆவது ஐ.பி.எல். தொடரில், அதிவேகமாக அரைசதம் அடித்த வீரர்கள் வரிசையில், 2ஆவது இடத்தை சென்னை அணித் தலைவர் தோனியுடன் (24 பந்து, எதிர்.மும்பை) பகிர்ந்து கொண்டார். முதலிடத்தில் பெங்களூர் அணியின் கெய்ல் (17 பந்து, எதிர்-புனே) உள்ளார். (ங)

# பார்சிலோனா ரென்னிஸ் ரபேல் நடால் சம்பியன்



பார்சிலோனா பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஸ்பெயினின் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

ஸ்பெயினில், ஆண்களுக்கான ஏ.டி.பி., பார்சிலோனா பகிரங்க ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபேல் நடால், சகநாட்டைச் சேர்ந்த நிக்கோலஸ் அல்மார்க் கோவை சந்தித்தார். ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்திய நடால் முதல் செற்றை 6:4 என வென்றார். பின் இரண்டாவது செற்றிலும் அசத்திய நடால் 6:3 என சுலபமாக தன் வசப்படுத்தினார்.

முடிவில், ஸ்பெயினின் ரபேல் நடால் 6:4, 6:3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார்.

8ஆவது முறையாக பார்சிலோனா பகிரங்க ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். (ங)

# சானியா இணை இறுதியில் சரிந்தது



போரிஸ் ரென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சானியா, அமெரிக்காவின் பெதானி இணை தோல்வியடைந்தது. ஜேர்மனியில் உள்ள ஸ்டட்கார்ட் நகரில் போர்ஷ் ரென்னிஸ் கிராண்ட் பிரிக்ஸ் தொடர் நடைபெற்றது. இதன் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மட்டக்-சாண்ட்ஸ் இணை, ஜேர்மனியின் லிசிக்கி, மோனா இணையை எதிர் கொண்டது. இதன் முதல் செற்றை 4:6 என இழந்த சானியா இணை, இரண்டாவது செற்றையும் 5:7 என பறி கொடுத்தது. முடிவில், இந்தியாவின் சானியா, அமெரிக்காவின் பெதானி இணை 4-6, 5-7 என்ற நேர் செற் கணக்கில் தோல்வியடைந்தது. (ங)

O/L மட்டும் போதும் கையில் ஒரு இலட்சம்
21 வயதுக்குட்பட்டவர்களுக்கு:
வெளிநாட்டில் படித்துக்கொண்டே ஒரு இலட்சம் சம்பாதிக்கலாம்.
விண்ணப்ப முடிவு திகதி: 02.05.2013
ஆலோசனைகளுக்கு மடிகணினி (Laptop) இலவசம்
(நிபந்தனைகளுடன்).
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 021 221 9016

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்! French! பிரெஞ்! French!
பிரான்ஸ், கனடா முதலிய நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழிஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். Paris இல் உள்ள எமது தலைமை நிறுவனத்திலும் France இன் வேறு எந்த இடத்திலும் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "Alliance Française" மட்டுமே.
இது ஓர் அரிய சந்தர்ப்பம். உடன் பதிவுசெய்யுங்கள்
புதிய வகுப்புக்கான அனுமதிகள் 04.05.2013 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093

SPOKEN ENGLISH
யாருக்காக?
- அரச, தனியார் அலுவலர்கள்
- பல்கலை, உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர், யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12 வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி - -04.05.2013
பிரிவு : 01 காலை 8.00 - 10.00 பிரிவு : 02 மு.ப 10.00 - 12.00
பிரிவு : 03 பி.ப 1.00 - 03.00 பிரிவு : 04 மாலை 3.00 - 5.00
வார நாள் பயிற்சி நெறி : 06.05.2013 (திங்கள், புதன்)
பிரிவு : 01 9.00 - 11.00 பிரிவு : 02 3.00 - 5.00
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ் தொ.பே : 077 621 4567

உதயன் விளம்பரத் தொடர்புக்கு— advt@uthayan.com 0215671111

கணினி திருத்தம் (Computer Repair)
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கு வந்து திருத்தித் தருகிறோம்.
அழையுங்கள் -0779086737 (36860) (6)
GUNAA BEST PC 52, Hospital Road,Jaffna.

கார் விற்பனைக்கு
டாக்டரின் பாவனையில் இருந்த ALTO SPORTS K 10 வெள்ளைநிற கார் (10,000km) உள்ள KM-70xx கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0775027179 (36878) (10,6)

SUMANS ENTERPRISE
இல.291, பிறவுண் வீதி,கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்.
- நவீன வகையான Wall Tiles, Floor Tiles, Bathroom Tiles, Commode Sets Plastic, Glass Doors,Mirror Sets.
- PVC Pipes & Fittings நீர்த்தாங்கிகள் Pet.Arpico 350L, 500L, 750L,1000L,1500L,2000L,5000L,10000L மேற்படி அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.
- தரமான கல்சியம் நீக்கி Air Freshner, Glass Cleaner, Toilet Cleaner, Floor Mopper, Dish Washer என்பவற்றை மொத்த கொள்ளளவில் பெற்றிடலாம்.
- உங்கள் வீட்டின் Tile Electrical மற்றும் நீர்க்குழாய் பொருத்தும் வேலைகள் எம்மால் பொறுப்பேற்று மிகச்சிறந்த முறையில் செய்து தரப்படும்.

Sumansenterprise@gmail.com. தொடர்பு: 021 5100700

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான 4ஆம் நாள் - நாகலோகக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## புங்குடுதீவுப் பகுதியில் 32 சிறுவர்கள் வீடுகளில் இருந்து பாடசாலைகளுக்கு

### அதிகாரிகள் தேடிப்பிடித்து கூட்டிச் சென்றனர்

யாழ்ப்பாணம்,ஏப்.30

பாடசாலைக்குச் செல்லாத 32 சிறுவர்கள் நேற்று பாடசாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோண் குயின்ரஸ் தலைமையில் நேற்று திங்கட்கிழமை புங்குடுதீவில் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், பொலிஸார், சிறுவர் நல அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் புங்குடுதீவின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பெற்றோர்களுக்கு பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்ப வேண்டியது குறித்து விளக்கமாக எடுத்துக் கூறினர்.

சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பாதுவிடின் மேற்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. தொடர்ந்தும் சிறுவர்களைப் பெற்றோர் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கத் தவறின் சட்டநடவடிக்கைக்கு உள்ளாக வேண்டிவரும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமை காரைநகர்ப் பகுதியிலும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

# சுற்றுச் சூழலை வளப்படுத்த வடமாகாணத்தில் விசேட திட்டம்

## அமைச்சர் சுசில் பிரேமசந்திர

யாழ்ப்பாணம், ஏப்.30

வடமாகாணத்தில் சுற்றுச் சூழலை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் 3 மாதகாலப் பகுதிக்குள் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கான செயற்றிட்டங்களை துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் இவ்வாறு தெரிவித்தார் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு அமைச்சர் சுசில் பிரேமச்சந்திர.

சேவாலங்கா மன்றத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்துக்கான சுற்றுச்சூழல் மேம்பாடு தொடர்பான செயலமர்வு நேற்று கோண்டாவிலில் அமைந்துள்ள சேவாலங்கா மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் உரையாற்றுகையில்; வெளிநாடுகளில் இருந்தும், தென்னிலங்கைப் பகுதிகளில் இருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வடமாகாணத்தை நோக்கி வந்த வண்ணம் உள்ளனர். இதன் மூலம் வடமாகாணத்தில் சுற்றுலாத்துறை சார் வருமானம் அதிகரித்துச் செல்கிறது.

குறிப்பாக நாட்டிலேயே சுற்றுலாத்துறையில் அதிக வருமானம் பெறும் மாகாணமாக வடமாகாணம் உள்ளது. இந்த வளர்ச்சியைத் தக்க வைக்க வடமாகாணத்தில் சுற்றுச்சூழலை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இதற்கமைவாக வடமாகாணத்தில் சுற்றாடல் மேம்பாட்டுக்கான செயற்றிட்டங்களை 3 மாதகாலப் பகுதிக்குள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



விவசாயத்துறையில் பயின்ற மாணவர்களை ஒன்றிணைத்து கிராம மட்டங்களில் உள்ள மூலப்பொருள்களை அடையாளப்படுத்தி அதன் மூலம் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதனைவிட பாடசாலைகளுக்கு தென்னை மரக்கன்றுகளை விநியோகம் செய்து மாணவர்களை வழிப்படுத்தி அதனூடான பயன்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே தென்னிலங்கையில் 2 ஆயிரத்து 500 இக்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு இவ்வாறு, மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சுற்றுச்சூழல் மாசடையாத வகையில் இயற்கைப் பசளைகளைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு விவசாயத்துறை சார்ந்த ஆராய்சியாளர்கள் தமது திட்டங்களை முன்வைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ஐ-14)

# குற்றச்சாட்டுகள்

## 17 ஆயிரம் ரூபா அபராதம்

போக்குவரத்துப் பொலிஸார் வீதியில் சென்ற வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியபோது, நிறுத்தாமல் சென்றதால் அதனைத் துரத்திப் பிடித்து சோதனையிட்டனர்.

அதன் போது சாரதி மது போதையில் காணப்பட்டதுடன் காப்புறுதி மற்றும் இந்தவருடத்துக்கான வாகன வரி ஆகியவை அவரிடம் இல் லாதமை கண்டுபிடிக்கப்பட்டது.

மட்டுவில் வாசியான இந்த நபருக்கு எதிராக பொலிஸார் வாகனத்தை நிறுத்தாமல் சென்றமை, மதுபோதையில் காணப்பட்டமை, காப்புறுதி மற்றும் வாகனவரி வைத்திருக்காமை ஆகிய நான்கு குற்றச் சாட்டுக்களுடன் சாவகச்சேரி நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்து குறிப்பிட்ட சாரதியை நீதிமன்றில் முற்படுத்தினர்.

சாரதி குற்றங்களை ஒப்புக்கொண்டதையடுத்து 17 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ந-9)

# சிறு தானியப் பயிர்கள் நாசம்

தென்மராட்சி,ஏப்.30

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ வடக்குப் பிரிவு நெல் வயல்களில் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்கள் வளர்ப்பு மாடுகளால் நாசம் செய்யப்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த வருட கால போக நெற்செய்கையின் பின்னர் அடிக்கடி மழை பெய்ததால் அறுவடை செய்யப்பட்ட வயல்களில் சிறு தானியப் பயிர்கள் பயிரிட பலர் விரும்பியதால் அந்தப் பகுதி கமக்கார அமைப்பின் முயற்சியினால் 12 லட்சம் ரூபா செலவில் முட்கம்பி வேலி அடைக்கப்பட்டது.

பெரும்பாலான நெல் வயல்களை உள்ளடக்கிய பகுதியில் முட்கம்பி வேலி அடைக்கப்பட்ட போதிலும் குறைந்த அளவினரே சிறு தானியப் பயிர்களைப் பயிரிட்டனர்.

அடிக்கடி அந்தப் பகுதியில் மழை பெய்ததால் பயிர்கள் அதிகளவில் விளைச்சலைத் தரும் என எதிர் பார்த்திருந்த விவசாயிகளுக்கு அந்தப் பகுதி வளர்ப்பு மாடுகள் மேய்ச்சலுக்கு விடப்பட்டதால் பயிர்கள் மாடுகளால் அழிக்கப்பட்டு தமக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (ஒ-9)



வேலணை சமுர்த்தி சங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட வைப்பில் கூடுதலான சேமிப்பை மேற்கொண்ட உத்தியோகத்தருக்கு வேலணை பிரதேச தவிசாளர் பரிசில் வழங்குகிறார். அருகில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் சமுர்த்தி முகாமையாளர் செல்வி நகுலராணி ஆகியோர் நிற்கின்றனர். (வ-7)

## நெடுந்தீவில் செஞ்சிலுவைச் சங்க இளைஞர் முகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

இலங்கை செஞ்சிலுவைச் சங்க இளைஞர் முகாம் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுப் பிரிவில் நடைபெறவுள்ளது.

இந்த முகாமில் வேலணை, நெடுந்தீவுச் செஞ்சிலுவைச் சங்க இளம் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அன்றையதினம் பகல் ஒரு நாள் முதலுதவிப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த முகாமில் கலந்து கொள்ளும் இளம் உறுப்பினர்கள் எதிர்வரும் முதலாம் திகதி தமது பிரதேச கிளைகளில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (வ-7)

# புதுக்குடியிருப்பில் மீளக் குடியமர்ந்த பலர் வீடு வசதியின்றி நிர்க்கதி நிலையில்

## புள்ளி அடிப்படையால் பாதிப்பு என்கிறார்கள்

புதுக்குடியிருப்பு,ஏப்.30

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் புள்ளி அடிப்படையில் இந்திய வீட்டுத் திட்டத்தில் இணைக்கப்படுவதால் தற்காலிக வீடுகள் இன்றி, நிரந்தர வீடுகள் இன்றி நிர்க்கதியான நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இந்த நிலைப்பாடு குறித்துக் கவலையும் அதிருப்தியும் தெரிவித்துள்ள பாதிக்கப்பட்ட மக்கள், தங்கள் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு ஏதாவது ஒரு வீட்டுத் திட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது உறவுகளையும், உடைமைகளையும் இழந்து வெறுங்கையுடன் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வசதியீனங்கள் மத்தியில் பல மாதங்கள் வாழ்ந்த மக்கள் மீண்டும் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் எழுபதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்கள், வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளதால் தற்காலிக வீடுகளிலும் குடிசைகளிலும் நெருக்கடி நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த குடும்பங்கள் இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தில் இணைக்கப்பட்டு வருகின்றன. புள்ளி அடிப்படையில் மக்கள் இந்த வீட்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதால் காலங்காலமாக வாழ்ந்து வந்த குடும்பங்கள் இந்தத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ்.மாவட்டம், திருகோணமலை மாவட்டம் ஆகிய [illegible] ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தஞ்சம் புகுந்த மக்கள் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் ஆனால் ஆரம்பகாலம் தொட்டு வாழ்ந்து வந்த குடும்பங்கள் இந்த வீட்டுத் திட்டத்தில் இணைக்கப்படவில்லை என்றும் மேலும் கூறப்படுகிறது.

நிரந்தர வீடுமின்றி, தற்காலிக வீடுமின்றி நிம்மதியிழந்த நிலையில் வசதியீனங்கள் மத்தியில் குடிசைகளில் வாழ்ந்து வரும் மக்கள், தங்கள் குடும்ப நிலையை உணர்ந்து ஏதாவதொரு வீட்டுத் திட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (ஒ-115)

# கால்நடை திருட்டு அதிகரிப்பு நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.30

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் கால்நடைகளை திருடிச் செல்லும் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

குறித்த பிரதேசங்களில் உள்ள விவசாய நிலங்கள் மற்றும் வயல் பகுதிகளில் மேய்ச்சலுக்காகக் கட்டப்படும் கால்நடைகள் இவ்வாறு களவாடப்பட்டு வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை நீர்வேலி தெற்கு விவசாய நிலத்தில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்ட பெறுமதி வாய்ந்த ஆடு ஒன்றை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

இதனைவிட கோப்பாய் தரவை பகுதியில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்ட கால்நடைகளும் இவ்வாறு காணாமல் போவதாக மக்கள் தெரிவித்தனர்.

**கால்நடைத் திருட்டை அடுத்து பிரதேச மக்கள் விவசாய நிலங்களில் இவ் வாறு கால்நடைகளை பயத்து டனே மேய்ச்சலுக்கு கட்டி வருகின்றனர்.**

கால்நடைத் திருட்டை அடுத்து பிரதேச மக்கள் விவசாய நிலங்களில் இவ்வாறு கால்நடைகளை பயத்துடனே மேய்ச்சலுக்கு கட்டி வருவதாக கவலையுடன் தெரிவிக்கின்றனர். (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## விஜயரட்ணம் அம்சமாலனமூர்த்தி

ஆண்டொன்று ஆனதோ?
அப்பாவே உன்முகம் காணமல் போனதோ?
நீர் நடந்த இடம் எங்கும் நெஞ்சுக்குள்
நினைவுகளாய் ஆனதால்
நீங்காமல் நித்தியமாய் நீர்தானே என்றென்றும்
பாங்குடனே எமை பக்குவமாய் வளர்த்தவரே
ஏங்குதையா எம்மனம் உனை எண்ணி என்றென்றும்
அன்புள்ள அப்பாவே ஆருயிர் செல்வமே
எப்போ நாம் இவ்வுலகில்
உனைக் காண்போம் இனிமேலும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு 16.02.1963
உதிர்வு 10.05.2012

கருமலை தெற்கு,
மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## அப்பாக்குட்டி தெய்வேந்திரராசா



கோப்பாய், கிளுவானை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி தெய்வேந்திரராசா 28.04.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி-கைராசி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்-நவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், திலகராணியின் பாசமிகு கணவரும், சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசம்மா, இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனும், ஸ்ரீகாந்த செல்வம், யோகராணி, ஜெயராணி, குஞ்சுராணி ஆகியோரின் மைத்துனரும், மோகனராஜன் (கனடா), ஜீவகலா (ஜேர்மனி), சுமதி (அளவெட்டி), சுகந்தினி (கனடா), கேமலதா (வல்வெட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரராணி, பாஸ்கரன், இராஜேந்திரன் (அளவெட்டி-மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), செல்வலிங்கம், சசிகரன் ஆகியோரின் அன்பு மாமனும், கோகுலன், கோவிதன், கவிசன், அபர்ணன், தக்சன், தனுஷன், சந்தியா, தனுஷ்கா, நிருசன் ஆகி யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் அளவெட்டி தெற்கு வைரவர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**
**021 320 9011**

டச்சு றோட், அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(C/8476)(10.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## மரியாம்பிள்ளை அன்னம்மா



*எங்களை வழிநடத்திய தெய்வமே..*
*ஆண்டு ஒன்று முடிந்தாலும்*
*உங்கள் நினைவுகள் நீங்காதம்மா*
*எங்கள் கண்ணீர்ப் பூக்களால்*
*அர்ச்சித்து ஆண்டவன் அடியில்*
*உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி*
*பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று பி.ப. 4.30 மணிக்கு பரந்தன் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

210/2, முரசுமோட்டை,
பரந்தன்.

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

# கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை இறுதிக்கருத்தரங்கு

துறைசார் நிபுணர்களால் நடத்தப்படும்.

★ காலம் : 02.05.2013 & 03.05.2013 திகதிகளில் காலை 9.00-3.00 P.M வரை
★ இடம் : யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தம்பர் மண்டபம்
★ குறிப்பு : அச்சிடப்பட்ட குறிப்புக்களுக்கும் வசதிகளுக்குமாக ரூபா 300அறவிடப்படும். **ஆசிரியர் வட்டம்,யா/ யாழ் மத்திய கல்லூரி.**

# 90 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

## செல்வி திபாகரன் திவ்யா



அவர்களின் 90 ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் நாளை (01.05.2013) புதன் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(அவரது ஆசிரியர்களும் சக மாணவர்களும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

கல்லடி ஒழுங்கை
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

(C8473)(6.11)

குடும்பத்தினர்.



# தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்

## தரும பரிபாலன சபை

## வெளிமடை - 2013

பரு/தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலின் வருடாந்த வெளிமடை ஒழுங்குகள்

**விளக்கு வைப்பு : 03.05.2015 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு**
**வெளிமடையும் பொங்கலும் : 10.05.2015 வெள்ளிக்கிழமை தொடக்கம் மறுநாள் சனிக்கிழமை வரையும்**

* கோயில் சுற்றாடலில் உற்சவகால, தற்காலிக வியாபாரம் செய்ய விரும்புவோர், 08.05.2013 புதன்கிழமை பிற்பகல் 02.30 மணிக்கு சபை அலுவலகத்துக்கு சமுகம் தரவும்.

* 11.05.2013 சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆடுகள், கோழிகள் ஏல விற்பனையில், முழுப்பணமும் செலுத்தியே கொள்வனவு செய்ய முடியும்.

**"எட்டாம் மடை"** 17.05.2013 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி (அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு தும்பளை முத்துமாரி அம்மன் கோயிலில் விளக்கு வைப்பும் நடைபெறும்.)

(C/8472)(10.6)

| | | |
|---|---|---|
| **இ.கணேசநாதன்** | **சபா ரவீந்திரன்** | **கா. புஸ்பராசா** |
| பொருளாளர் | தலைவர் | செயலாளர் |

# அரசாங்க அறிவித்தல்

## யாழ்.மாவட்டச் செயலகம் வாகனம் விற்பனை

| No | Vehicle | Model & Make | Engine No | Chassis No |
|---|---|---|---|---|
| 01 | 251- 0899 | LN166R-PRMDS / Toyota Double | 3L – 4460780 | LN166 - 0003745 |
| 02 | 251-0895 | LN166R-PRMDS / Toyota Double | 3L – 4460197 | LN166 - 0003739 |
| 03 | 251-0900 | LN166R-PRMDS / Toyota Double | 3L - 4460654 | LN166 - 0003752 |
| 04 | 64 - 3093 | TOYOTA / Land Cruiser | IHZ – 0073788 | HZJ75 – 0013079 |

யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்க வாகனங்களை ஏலவிற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை அலுவலக நாள்களில், அலுவலக நேரத்தில் களஞ்சிய நலன்புரிக்கிளையுடன் தொடர்பு கொண்டு நாவற்குழியிலுள்ள அரசாங்க களஞ்சியத்தில் பார்வையிடலாம் என்பதுடன், விற்பனை தொடர்பான கேள்வி விண்ணப்பப் படிவத்தினை மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 30–04–2013 ஆம் திகதியிலிருந்து 30–05–2013 ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.3.30 மணி வரையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1,000.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 25,000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தைத் **தலைவர், மாவட்டச் செயலகப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என விலாசமிட்டு, கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் வாகனம் ஏலவிற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் – 2013 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ, அல்லது பிரதம கணக்காளர் அவர்களின் அலுவலகத்திலுள்ள அலுவலகக் கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ 30–05–2013 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படல் வேண் டும். அன்றையதினம் மு.ப. 11.00மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும்.

அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

*நிபந்தனைகள்*

1. மாவட்டச் செயலகக் கணக்குக் கிளையில் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000/= செலுத்திப், பற்றுச்சிட்டையைப் பெற்றுக்கொண்ட பின்னரே வாகனத்தைப் பார்வையிட முடியும்.
2. கேள்வி ஆவணங்கள் யாவும் 30–05–2013ஆந் திகதி மு.ப. 11.00மணியளவில் அரச அதிபர் மாநாட்டு மண்டபத்திற் திறக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் 30–05–2013ஆந் திகதியன்றே உரிய பணத்தினைச் செலுத்தி சகல ஆவணங்களுடனும் வாகனத்தை மாவட்டச் செயலகத்திலிருந்து கொண்டு செல்லுதல் வேண்டும்.

(சி/8474)(6.2)

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் தனபாலசிங்கம்



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தனபாலசிங்கம் நேற்று (29.04.2013) திங்கட்கிழமை காலை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், விமலாதேவியின் கணவரும், ஹம்சா, கௌசிகவதனி, திவாயினி, தனுஜா ஆகியோரின் தந்தையும், ஸ்ரீலங்கநாயகி, லிங்காதேவி, கமலாதேவி, தயாளகுமாரன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பத்மநாதன், சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற ரவீந்திரகுமார், கலைமகள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணிக்கு அவரது சகோதரியின் இல்லத்தில் (கந்தையா வீதி, சாவகச்சேரி) இல் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தையா வீதி, சாவகச்சேரி.

தகவல்: சகோதரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகேஸ்வரி தில்லைநடேசன் (இஞ்சிஅக்கா)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, தெகிவளை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி தில்லைநடேசன், நேற்று (29.04.2013) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேஸ் தில்லைநடேசனின் அன்பு மனைவியும், சின்னத்தம்பி-பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், கணேஸ் -கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், பகீரதன், தர்சினி(நோர்வே), சுஜேந்தினி (கனடா), தயாபரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும், விக்கினராஜா (நோர்வே), கருணாகரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், அவுஸ்ஸியா, டன்சியா, றோசியான், பது சியா, ஹரிஸ், தனேஸ், யஷ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற ஞானசுந்தரம், மங்கயற்கரசி (கனடா), மகேந்திரன், இரா ஜேஸ்வரி(கனடா) ஆகியோரின் பாசமிகு சகோ தரியும், தில்லையம்பலம், கனகம்மா (பிரான்ஸ்), காலஞ்சென்ற புவனேஸ்வரி, மகேந்திரன், றோகினி, ராதாகிருஸ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று 30.04.2013, 01.05.2013 ஆகிய தினங்களில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (01.05.2013) புதன்கிழமைகாலை ஈமைக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00மணியளவில் கல்கிசை இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 011 3053091, 077 1514962,
077 6306120

தகவல்:
குடும்பத்தினர்.

## சிவசுப்பிரமணியம் சிவரூபன்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சிவரூபன் நேற்று (29.04.2013) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் மகேஸ்வரி தம்பதியரின் மகனும், இராமலிங்கம் -இந்திராணிமலர் தம்பதியரின் மருமகனும், கிருசாந்தியின்(கீதா) கணவரும், சங்கவி(மாணவி, யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ரதுசாந்தி(மாணவி, யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), திவ்வியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவமேகலை, சிவரஞ்சன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் பி.ப. 3.00மணியளவில் தகனத்துக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலைரவர் வீதி, தர்பசிட்டி ஒழுங்கை,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

## திரு.அப்பாக்குட்டி தெய்வேந்திரராஜா



(தலைவர்- ஆலயப் பரிபாலன சபை, கோப்பாய் மத்தி நாவலடி முத்துமாரியம்மன் ஆலயம்) அவர்கள் நேற்றுமுன்தினம் (28.04.2013) ஞாயிற்றுக்கிழமை மறைந்த செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முத்துமாரியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை, கோப்பாய் மத்தி, நாவலடி முத்துமாரியம்மன் ஆலயம்

# மரண அறிவித்தல்

## திருமதி இராசலக்ஷ்மிஅம்மா ஜெகதீஸ்வரக் குருக்கள்



மருதடிப் பிள்ளையார் கோயிலடி சாவகச்சேரியை வசிப் பிடமாகக் கொண்ட திருமதி இராஜலட்சுமி அம்மா ஜெகதீஸ்வரக்குருக்கள் நேற்று முன்தினம் (28.04.2 013) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஜெகதீஸ்வரக் குருக்களின் (புன்னாலைக் கட்டுவன்) அன்பு மனைவியும், வா.மதுரா (ஜேர்மனி), வி.பவித்திரா (கொழும்பு), ஜெ.செந்தூரா (ஆசிரியர், வரணி மகாவித்தியாலயம்), ஜெ. மயூரன் (பிரதேச செயலகம், பூநகரி), ஜெ.திவ்யா (ஆசிரியர், அதக பாடசாலை, மட்டுவில்) ஆகியோரின் அன்புத் தாயும், வாமதேவ சர்மா (ஜேர்மனி), விஜயராஜசர்மா, ஹேமதிலகா ஆகியோரின் அன்பு மாமியும், புவனேஸ்வரி அம்மா, பாலகிருஷ்ண ஐயர் (புன்னாலைக்கட்டுவன்) வாகீஸ்வரிஅம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற குமாரசாமிஐயர் (ஆசிரியர்)- நீலாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும், வர்ஜண்யாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(01.05.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00மணியளவில் நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடிப்பிள்ளையார்
கோயிலடி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



கிளி/நாச்சிக்குடா அ.மு.க. பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியரும், எமது சக ஆசிரிய நண்பருமான திரு.து.வாகீஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி துரைராஜசிங்கம் கமலாதேவி** அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நண்பர்கள், முழங்காவில் ஆசிரியர் விடுதி, முழங்காவில். (36901) (16.14.9)

# மரண அறிவித்தல்

## சிமியோன் ஞானசேகரம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிமியோன் ஞானசேகரம் நேற்றுமுன்தினம் (28.04.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிமியோன்- றோஸ்மலர் தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், குணநாயகம், அல்வின் அம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், டனிஸ்ரா, டனிஸ்ரன், ஜெனிஸ்லாஸ், சாய்ம், யூட்லாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்லகுமாரின் அன்பு மாமனும், ரெபேக்கா, ரெபேக்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும், ராசசிங்கம், மரியறீற்றா, மரியராணி, ஜெயராஜம், குணசேகரம், றெயினா, மேரியம்மா, சீலன், றொபேட், றஸ்கின், பவுளின் ஆகியோரின் அன்பு அண்ணனும் அலக்சான்டர், புஸ்பம், புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் உரும்பிராய் புனித மிக்கல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
05 ★ 04 ★ 1971



மறைவு
31 ★ 03 ★ 2013

## அமரர் கந்தசாமி சுரேந்திரநாதன்

கடந்த 31.03.2013 அன்று சிவபதமடைந்த அமரர் கந்தசாமி சுரேந்திரநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்சடங்கில் பங்கு பற்றி ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியவர்களுக்கும் மேலும் பல வழிகளிலும் உதவி செய்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

1/9, இரண்டாம் ஒழுங்கை, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# துயர் பகிர்கிறோம்



புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவ குருவான சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்களது அன்பு மனைவி

## இராஜலக்ஸ்மி அம்மா

அவர்கள் இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆன்மா ஐங்கரனின் திருவடி சேர ஆயாக்கடவை ஐங்கரனை பிரார்த்திக்கின்றோம்.

பா.சுந்தர ராஜசர்மா ஸ்தானிக குரு,
ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானம் மற்றும் ஆயாக்கடவை சார் அந்தணர்கள் புன்னாலைக் கட்டுவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதிகள் தப்பி ஓட்டம்

கொழும்பு,ஏப்.30
அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு கைதிகள், வெளியில் அழைத்துவரப்பட்டபோது தப்பிச் சென்றுள்ளனர்.

மிஹிந்தலை, ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் கட்டட வேலைகளுக்காக 20 கைதிகள் வெளியில் அழைத்துவரப்பட்டனர். அவர்கள் இரு ஜெயிலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், குறித்த இருவரும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதிய உணவின் பின்னர் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# சித்திரவதைகள் தொடரும் நிலையில் இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு

## ஐ.நா.நிபுணர் அதிர்ச்சி

கொழும்பு,ஏப்.30
இலங்கையில் சித்திரவதைகள், காணாமற்போதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையிலும், கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு அந்த நாடு தலைமை வகிக்கவுள்ளமை குறித்து ஐ.நா. நிபுணர் யஸ்மின் சூகா அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக, விசாரிக்க ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர்களில் ஒருவரான தென்னாபிரிக்காவைச் சேர்ந்த யஸ்மின் சூகா, இலங்கை மக்களுக்கு எதிரான மீறல்கள் இன்னமும் தொடர்ந்து வருவதாக குற்றம்சாட்டியுள்ளார். ஆஸ்திரேலியாவின் 'ஏபிசி' வானொலிக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையில் மக்கள் தொடர்ந்து சித்திரவதை செய்யப்படுவதாகவும், காணாமற்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் போர்க்குற்றங்களை விசாரிக்காவிட்டால், இலங்கையில் நடைபெறும் கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக கனடா கூறியுள்ளதை அவர் பாராட்டியுள்ளார்.

இலங்கை அரசால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால், கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்த அவர்களை அனுமதிக்கக் கூடாது என்று 'அவர் கூறினார்.

ஆஸ்திரேலியா உள்ளிட்ட, ஏனைய நாடுகள் தாம் மாநாட்டில் பங்கேற்போம் என்று பலவீனமான முறையில் கூறியுள்ளமை ஆச்சரியமளிக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)




ஆரம்பம்... குறுகிய கால தையல் வகுப்புக்கள் (3 மாதம் மட்டுமே)

வெளிநாடு செல்ல இருக்கும் பெண்களுக்காகவும் மற்றும் இல்லத்தரசிகளுக்குமான ஓர் இனிய செய்தி

உங்களது மேலதிக வருமானம் ஈட்டுவதற்கான மாபெரும் பயிற்சித் திட்டம்.

(இதுவரை எந்த ஒரு நிலையத்திலும் கண்டிராத முறையில் இலகுவான கற்றல்)

ஆரம்பம்: பிரிவு I:- 01.05.2013
பிரிவு II:- 05.05.2013

தொடர்புகளுக்கு:
சஞ்ஜிகா ரெயிலெரிங்
கலட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
Phone: 0771882507 / 0752480593.





செ.பரணிதரனின் 10 ஆம் ஆண்டு ஞாபகார்த்த

"மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி"

OVER - GAME - ஓவர் கேம்

இடம்:- தியான வைரவர் முந்தல், நீர்வேலி வடக்கு.

07.05.2013 இற்கு முன்பு உங்கள் பதிவினை உறுதி செய்வதற்கு தொடர்பு கொள்ள 077 726 8421

செ.கிரிதரன் (ஏற்பாட்டாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


## திருடப்பட்ட சங்கிலி தங்கக் கட்டியாக மீட்பு

மட்டக்களப்பு, ஏப்.30
மட்டக்களப்பு சந்திவெளி யிலுள்ள வீடொன்றிலிருந்து திருடப்பட்ட தங்கச் சங்கிலி, உருக்கிய தங்கக் கட்டியாக மீட்கப்பட்டுள்ளது.

சந்திவெளியி லுள்ள வீடொன்றிலிருந்து அண்மையில் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா பணமும் திருடப்பட்டிருந்தன.

திருடப்பட்ட பணத்தில் 43, 730 ரூபாவும், ஒன்றரை பவுண் உருக்கப்பட்ட கட்டித் தங்கமும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தார். (ச)


**உடன் விற்பனைக்கு**

PR XXXX தொடரிலக்கமுடைய Hijet ரக வான் (Full Boddy) ஒன்று உடன் விற்பனைக்குண்டு. மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நேரில் வரவும்.
தொடர்பு: 077 656 9870 (36333)(2)

**வேலை வாய்ப்பு**

யாழ்.நகரில் வைத்திய நிலையம் ஒன்றுக்கு உதவித் தாதிப் பயிற்சி பெற விரும்புபவர்களும், பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்
தொடர்புகளுக்கு:
077 873 0129,
077 326 1859 (36887)(2)

**பதவி வெற்றிடங்கள்**

Company Rep, Clerk, Air Ticketing Officers
தகைமைகள்: ஆங்கிலம், கணினி அறிவுகள் முக்கியம்.
தகைமையுடையவர்கள் இல.95, முஸ்லிம் கல்லூரி வீதியிலுள்ள Rif Raa International கிளைக் காரியாலயத்துக்கு காலை 9 தொடக்கம் -4.00 மணி வரை நேரில் சமுகமளிக்கவும்.
IT & Advt.Division (36884)(11)


# மரண அறிவித்தல்

## திருமதி துரைராஜசிங்கம் கமலாதேவி



திருநெல்வேலி கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராஜசிங்கம் கமலாதேவி நேற்று (29.04.2013) திங்கட்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் துரைராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கமணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நீலாயதாட்சி தம்பதியரின் மருமகளும் ஜெகதீஸ்வரன் (கண்ணன் - பிரான்ஸ்), வாகீஸ்வரன் (சிவம் - ஆசிரியர், கிளி/நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை), சதீஸ்வரன் (மதன் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், நர்மதா, ஜெயதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும், யதுகரன், குவாயினி, மகிஷாயினி, பிரவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சண்முகலிங்கம், விஜயரெட்ணம் (கனடா), மல்லிகாதேவி, றெஜினாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியலட்சுமி, கமலலோஜினி, இராஜேஸ்வரி, திருநாவுக்கரசு, சோதிமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனத்துக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். (2.6)(36885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org